Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 165

ஞாயிற்றுக்கிழமை
10 மே 2026

சித்திரை 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –16+08
விலை – ரூபா 60



தமிழக அரசியலில் திருப்பம்

## விஜய் ஆட்சியமைப்பதற்கு கிடைத்தது பெரும்பான்மை

இன்று காலை பதவியேற்பு

விரிவு பக்கம்:- 13

யாழ். போதனாவில் தீ

# கோடிக் கணக்கான மருந்துகள் தீக்கிரை

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருந்துக் களஞ்சியத்தில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீவிபத்துக் காரணமாக பல கோடி ரூபா பெறுமதியான மருந்துகள் எரிந்து அழிந்துள்ளன. »13

நடுக்கடலில்

## தத்தளித்த 'சிவகங்கை' 144 பேர் அருந்தப்பு

விரிவு பக்கம்:- 03



## இன்றுமுதல் வடக்கில் கனமழை

விரிவு பக்கம்:- 13

## போதனாவின் செயற்பாட்டில் பாதிப்பு எதுவும் ஏற்படாது!

பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

விரிவு பக்கம்:- 13

செம்மணியில்

## நேற்றும் ஐந்து என்புத்தொகுதி

விரிவு பக்கம்:- 13

பிரதேசசெயலரால் நடத்தப்படவிருந்த

## பொம்மர்ஸ் கழகத்தின் கூட்டத்துக்குத் தடை!

விரிவு பக்கம்:- 13

## சஞ்சீவி

புரட்சிகர் புராணி

"உவராவது எங்கட மீனவர் பிரச்சினைக்கு முடிவு கட்டுவாரோ எண்டு பாப்பம்"

கனடாவில் உங்கள் பிள்ளைகள் கல்வி கற்பதற்கான அரிய சந்தர்ப்பம்!



03 – 17 வயதிற்கு இடைப்பட்ட பிள்ளைகள் விண்ணப்பிக்கலாம்

உங்கள் பிள்ளைகள் சிறந்த ஆரோக்கிய நிலையில் இருக்க வேண்டும்

பெற்றோர்கள் நிலையான மற்றும் போதுமான வருமானத்தை உறுதிப்படுத்த வேண்டும்

வருடாந்த பாடசாலை கட்டணம்: 13,500 கனடிய டொல்ர்கள்

விசா அனுமதி (Visa Approval) கிடைத்த பின்னரே பாடசாலைக் கட்டணத்தைச் செலுத்தும் வாய்ப்பு

உலகத்தரம் வாய்ந்த கல்வியில் இரண்டாமிடத்தில் உள்ள கனடாவிற்கு

உங்கள் பிள்ளைகள் விசா பெறும்போது, அதனுடன் இணைந்து பெற்றோருக்கும் இலவச விசா அனுமதி கிடைக்கும் வாய்ப்பு.

பெற்றோருக்கு LMIA அனுமதியுடன் கூடிய நிரந்தர வேலைவாய்ப்புகளும் உறுதி செய்யப்படுகின்றன.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எமது நிறுவனம் பொறுப்புடன் முன்னெடுக்கும்

உங்கள் பிள்ளைகளின் கனேடியக் கனவை நனவாக்க இன்றே தொடர்பு கொள்ளுங்கள்!

Consolidated Academic Lanka (Private) Limited

Address:
No.147, High Level Road,
Moraketiya Junction,
Mr. Kottu Building, 1st Floor,
Pannipitiya, Sri Lanka

Phone:
077 197 9845

Your Trusted Partner for Quality Education & Bright Future

Consolidated Academic Lanka (Pvt) Ltd

கனடாவில் குறைந்த செலவில் பாடநெறிகள்!



க.பொ.த உயர்தரம் (A/L) தேவையில்லை

18 – 45 வயதுக்குட்பட்ட ஆண் / பெண் விண்ணப்பிக்கலாம்

IELTS தேவையில்லை

விசா அனுமதி கிடைத்த பிறகு கட்டணம் செலுத்தும் வசதி

முழு பாடநெறிக்கான கட்டணம் வெறும் CAD 2,000 மட்டுமே!

★ வரம்புக்கு உட்பட்டவை ★

பாடநெறிகள் என்ன?

- அழகு பராமரிப்பு & முடி அலங்காரம்
- பராமரிப்பாளர் / நன்னி
- கம்ப்யூட்டர் உதவியாளர்
- நர்சிங் / விமான நர்சிங்
- சமையல் கலை
- திருமணம் & நிகழ்ச்சி அலங்காரம்
- பிளம்பர் / தச்சர் / இலக்ரீஷியன்
- எரிவாயு பொருத்துநர் / மெக்கானிக்
- சுகாதார உதவியாளர்
- வெல்டர் / கட்டிட தொழிலாளர்
- சமையல்காரர் / மெஷினிஸ்ட்

இன்னும் மேற்பட்ட பாடநெறிகளை கற்கும் வாய்ப்பு!

பாடநெறி முடித்த பின்னர்:

LMIA அங்கீகரிக்கப்பட்ட வேலைக்கு பரிந்துரை செய்யப்படுவீர்கள்.

அதன் கீழ் நீங்கள் Green Card மற்றும் நிரந்தர குடியுரிமை பெற தகுதி பெறுவீர்கள்.

எதிர்காலத்தில் பெற்றோர்களையும் அழைத்துச் செல்லக் கூடிய வாய்ப்பு

இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்!

077 1979845

Consolidated Academic Lanka (Pvt) Ltd
NO.147, High Level Road,
Moraketiya Junction,
Mr.Kottu Building, 1st Floor,
Pannipitiya, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கொவிசெத**
திகதி 09.05.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4426
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 27 36 47 60
விசேட எழுத்து P

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 09.05.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1493
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 08 10 15 21

**NLB ஜய**
திகதி 09.05.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0452
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 6 8 9 7

**மெகா பவர்**
திகதி 09.05.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2532
ஆங்கில எழுத்து K
சுப்பர் இலக்கம் 12
வெற்றி இலக்கங்கள் 20 43 64 77

**மஹஜன சம்பத**
திகதி 09.05.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6184
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 3 4 9 5 2 3

**தன நிதானய**
திகதி 09.05.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2214
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 17 24 30 62
விசேட எழுத்து D

**சுப தவசக்**
திகதி 09.05.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0300
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 13 19 45

# இலங்கை-வியட்நாம் உறவு கூட்டாண்மை இலக்கில் நகர்வு

## வியட்நாம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,மே 10

**இலங்கை மற்றும் வியட்நாம் இடையிலான 55 ஆண்டுகால இராஜதந்திர உறவை ஒரு 'விரிவான கூட்டாண்மை' மட்டத்திற்கு உயர்த்துவதற்கு இரு நாடுகளும் தீர்மானித்துள்ள நிலையில், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப் பரிமாற்றத்தை 1 பில்லியன் அமெரிக்க டொலர் இலக்கை நோக்கி விரைவாகக் கொண்டு செல்ல இணக்கம் காணப்பட்டுள்ளது என்று வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி டோ லாம் தெரிவித்துள்ளார்.**

வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுவின் பொதுச்செயலாளருமான டோ லாமும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் நடத்திய கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமக்கிடையே பொருளாதார, பாதுகாப்பு மற்றும் அரசியல் ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும். அதன்படி பரஸ்பர நம்பிக்கை, புரிதல் மற்றும் மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் அரசியல், பாதுகாப்பு சார்ந்த ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக கட்சி, அரசு, நாடாளுமன்றம் மற்றும் மக்களுக்கு இடையிலான தொடர்புகளையும், உயர்மட்டப் பரிமாற்றங்களையும் மேலும் வலுப்படுத்தவும், இருதரப்பு ஒத்துழைப்பு வழிமுறைகளைப் பேணவும் நாம் ஒரு உடன்பாட்டிற்கு வந்துள்ளோம்.

விவசாயம், வலுசக்தி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் வியட்நாம் முதலீட்டாளர்கள் இலங்கையில் தமது முதலீடுகளை விரிவுபடுத்தத் தயாராக உள்ளனர். அதேபோன்று கல்வி, கலாசாரம், சமயம் மற்றும் மக்களுக்கிடையிலான தொடர்புகளை மேம்படுத்துவதற்கான பல்வேறு வழிகளை நாம் ஆராய வேண்டும். எமது இரு நாடுகளுக்கும் இடையே மிக நீண்டகால கலாசார மற்றும் வரலாற்று ரீதியான பிணைப்புகள் உள்ளன. இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த உயர்ந்த கலாசார, ஆன்மிக பெறுமதிகளை தொடர்ச்சியாக மேம்படுத்த எதிர்பார்க்கிறோம் - என்றார். (ச-இ)



# ரணில் மீண்டும் களத்துக்கு ஜூன் மாதம் புதிய திருப்பம்

## ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு,மே 10

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் தீவிர அரசியலுக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. அதன் பின்னர் நாட்டின் அரசியலில் மாற்றங்கள் ஏற்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜூன் மாதம் முதல் அல்லது இரண்டாம் வாரத்தில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தீவிர அரசியலில் ஈடுபடுவார். தாக்கம்: ரணிலின் வருகையைத் தொடர்ந்து இலங்கை அரசியலில் புதிய திருப்பங்கள் மற்றும் கூட்டணிகள் உருவாக வாய்ப்புள்ளது. ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையே ஒரு சிறந்த புரிந்துணர்வு எட்டப்பட்டுள்ளது. இலங்கையை உலகளவில் சரியான பாதையில் கொண்டு செல்ல ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகிய இருவருமே தகுதியானவர்கள் - என்றார். (ச-இ)

# இலஞ்சக் குற்றத்தில் பிரதி மேயர் கைது!

கொழும்பு,மே 10

தேசிய மக்கள் சக்திக் கட்சியின்கீழ் ஆட்சியிலிருக்கும் குருநாகல் மாநகரசபையின் பிரதி மேயர், பத்தரமுல்ல பகுதியில் இலஞ்ச ஆணைக்குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். 3 மில்லியன் ரூபா இலஞ்சம் பெறச் சென்றபோது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். குருநாகல் பேருந்து நிலையம் மற்றும் பொதுக் கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்காக பிரதி மேயர் இந்த இலஞ்சத்தைக் கோரியதாகக் கூறப்படுகிறது. (ச-இ)

# நீதிமன்ற வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்!

## தயாசிறி தெரிவிப்பு

உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் நீண்டகாலமாக நிலவும் நீதிபதிகளுக்கான வெற்றிடங்களை அரசாங்கம் உடனடியாக நிரப்பவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர் நீதிமன்றத்தில் கடந்த 6 மாதங்களாக 5 நீதியரசர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. மேன்முறையீட்டு நீதிமன்றில் 3 நீதியரசர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தகுதியுள்ள கீழ் நிலை நீதிமன்ற நீதிபதிகளுக்கு இந்த உயர் பதவிகளை வழங்கி, நீதித்துறையின் சுயாதீனத்தையும் வேகத்தையும் உறுதிப்படுத்த வேண்டும் - என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 09.05.2026
தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0892
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கம் 7 3 1 7 5 5

**Super Ball**
திகதி 09.05.2026
தினம் சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3158
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கம் 34 52 76 80

**சனிதா**
திகதி 09.05.2026
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கம் 52 54 74 78
வெற்றி வாரம் 5319

**SASIRI**
திகதி 09.05.2026
தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0988
வெற்றி இலக்கம் 08 18 44

**லக்ன ராசி**
திகதி 09.05.2026
தினம் சனிக்கிழமை
தனுஷம்
வெற்றி இலக்கம் 22 23 32 34
சீட்டிழுப்பு வாரம் 4870

**KAPRUKA**
திகதி 09.05.2026
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து O
சுப்பர் இலக்கம் 38
வெற்றி இலக்கம் 02 04 13 43
வெற்றி வாரம் 2334

**அத கோடிபதி**
திகதி 09.05.2026
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கம் 14 19 38 59
வெற்றி வாரம் 2984



## சிறுமி துஷ்பிரயோகம்

# தாய்க்கு விளக்கமறியல் தேரருக்குப் பயணத்தடை

அநுராதபுரம்,மே 10

சிறுமியொருவரை பணத்துக்காக விற்பனை செய்தமை மற்றும் துஷ்பிரயோகத்துக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் சிறுமியின் தாய் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கில் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ள தேரர் ஒருவருக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோது இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

சிறுமியின் சாட்சியங்களைக் காணொலி மூலம் பதிவு செய்ய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு நீதவான் உத்தரவிட்டார். சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ள தேரரைக் கைதுசெய்வதற்கான விசேட நடவடிக்கைகளை நிட்டம்புவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சாட்சியங்களின் பாதுகாப்பு அரசுக்கே முழுப்பொறுப்பு

## ஐ.ம.சக்தி தெரிவிப்பு

**கொழும்பு,மே 10**

**ஊழல் வழக்குகளின் சாட்சிகள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மர்மமான முறையில் உயிரிழப்பது நாட்டுக்கு ஆபத்தான அறிகுறியாகும். சாட்சிகளையும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களையும் பாதுகாக்கவேண்டிய முழுப்பொறுப்பும் அரசாங்கத்துக்கே உரியதாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா எயார்லைன்ஸின் முன்னாள் அதிகாரியான கபில சந்திரசேன, 'எயார் பஸ்' கொள்வனவு மோசடி வழக்கில் மிக முக்கியமான சாட்சியாகவும் குற்றஞ்சாட்டப்பட்டவராகவும் இருந்தார். நீதிமன்ற விசாரணைக்கு அழைக்கப்படவிருந்த நிலையில் இவரது திடீர் மரணம் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. அதேவேளை திறைசேரியின் 2.5 மில்லியன் டொலர் மோசடி குறித்துப் புகாரளித்த அதிகாரி ரங்க ராஜபக்ச, அண்மையில் மர்மமான முறையில் உயிரிழந்தார். இது தற்கொலையா அல்லது கொலையா என்பதில் மர்மம் நீடிக்கின்றது.

நீதிமன்ற விவகாரங்களில் ஜனாதிபதி நேரடியாகத் தலையிடுவது போன்ற கருத்துகளை வெளியிடுகிறார். இதனால் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தங்களுக்கு நியாயமான தீர்ப்பு கிடைக்காது என்ற அச்சத்தில் உயிர்மாய்த்துக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படலாம் அல்லது அவர்கள் மௌனமாக்கப்படலாம்.

ஊழல் மோசடிகளுக்கு எதிராகத் தண்டனை பெற்றுக்கொடுக்க அரசாங்கத்துக்கு உண்மையான ஆர்வம் இருந்தால், முதலில் சாட்சிகளையும் (Witnesses) மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களையும் பாதுகாக்கவேண்டும். உயர்மட்ட ஊழல்களை மூடிமறைப்பதற்காக இந்த உயிர்கள் பறிக்கப்படுகிறதா என்ற சந்தேகம் மக்களிடையே எழுந்துள்ளது. இதுகுறித்து முறையான மற்றும் சர்வதேச தரத்திலான விசாரணைகள் அவசியம்- என்றார். (ச-இ)




## திருநெல்வேலிப் பொதுச்சந்தைக்கு கண்காணிப்பாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணம்,மே 10

திருநெல்வேலிப் பொதுச்சந்தையின் அன்றாடச் செயற்பாடுகளைக் கண்காணிக்க, நல்லூர்ப் பிரதேச சபையால் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பிரத்தியேகச் சீருடையுடன், பொதுச் சந்தை மற்றும் அதன் சுற்றுப்புறத்தைக் கண்காணிக்கும் பணிகளை நேற்று முதல் ஆரம்பித்துள்ளனர்.

நுகர்வோருக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள், போக்குவரத்துக்கு இடையூறாக நடைபாதையில் பொருள்களை வைத்தல், சந்தையின் தூய்மைக்குக் குந்தகம் விளைவித்தல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பிரதேசசபை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

சந்தையில் விவசாயிகளுக்கு அநீதி இழைக்கப்படுமாயின், அதுதொடர்பிலும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சந்தைக் கண்காணிப்பாளர்களிடம் விவசாயிகள் தெரிவிக்கமுடியும். அத்துடன் சந்தையில் ஏற்படுகின்ற இடர்கள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் பொதுமக்களும் முறையிடமுடியும். கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் நல்லூர்ப் பிரதேசசபை உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார். (க-66)

## நடுக்கடலில் தத்தளித்த 'சிவகங்கை' 144 பயணிகள் பாதுகாப்பாக மீட்பு!

யாழ்ப்பாணம்,மே 10

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறைக்கும் இந்தியாவின் நாகப்பட்டினத்துக்கும் இடையிலான பயணிகள் போக்குவரத்துக் கப்பல் நேற்றுமுன்தினம் இயந்திரக் கோளாறு காரணமாக நடுக்கடலில் தத்தளித்த நிலையில் அதிலிருந்த 144 பயணிகளும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். இந்திய அதிகாரிகளின் துரித நடவடிக்கையால் பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் பிற்பகல் 2:30 மணியளவில் 144 பயணிகளுடன் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து குறித்த கப்பல் புறப்பட்டது.

இந்திய எல்லையான கல்லார் பகுதிக்கு அருகே, கரையிலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் கப்பலின் இயந்திரத்தில் திடீரெனக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

பொதுவாக 4 மணிநேரத்தில் சென்றடைய வேண்டிய கப்பல், இரவு நேரமாகியும் கரை சேராததால் பயணிகளின் உறவினர்கள் மத்தியில் அச்சம் நிலவியது.

அதனையடுத்து இந்திய கடலோரப் பாதுகாப்புப் படையினர் மற்றும் உள்ளூர் மீனவர்கள் உடனடியாக மீட்புப் பணியில் ஈடுபட்டு மற்றுமொரு கப்பலின் உதவியுடன், பழுதடைந்த கப்பல் மெதுவாக கரைக்கு இழுத்துவரப்பட்டது.

கப்பலில் பயணித்த 144 பயணிகளும் எவ்வித காயமுமின்றி பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். ள



## 25 கர்ப்பிணிகளுக்கு சத்துணவுப்பொதி

யாழ்ப்பாணம்,மே 10

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட தொண்டைமானாறு தெற்கு, கெருடாவில் தெற்கு, கெருடாவில் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த, தெரிவுசெய்யப்பட்ட 25 கர்ப்பிணிகளுக்கு, ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துணவுப்பொதிகள் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் நேற்று வழங்கப்பட்டன. ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் குறித்த சத்துணவுப் பொதிகளைப் பயனாளிகளுக்கு வழங்கினார். ஆச்சிரமத்தால், மாதாந்தம் இந்த உதவித்திட்டம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-66)



## கூத்துப்பெருவிழா

யாழ்ப்பாணம்,மே 10

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகமும், பிரதேச பாரம்பரியக் கூத்து, இசை நாடகக் கலைஞர்களும் இணைந்து நடத்திய இசை நாடகக் கூத்துப் பெருவிழா, பளை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்வின் விருந்தினர்கள் பளை பேருந்து நிலையத்திலிருந்து மங்கள வாத்திய இசையோடு நிகழ்விடத்துக்கு அழைத்துவரப்பட்டனர். பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன், பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைத் தவிசாளர் சு.சுரேன், கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் கி.மாலினி, கிளிநொச்சி மாவட்ட கலாசார உத்தியோகத்தர் செ.ரூபகுமார், கிளிநொச்சி மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.நிலோஜா உள்ளிட்டோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். நிகழ்வில், சத்தியவான் சாவித்திரி, ஞானசௌந்தரி, அரிச்சந்திர மயானகாண்டம், காத்தவராயன் கூத்து போன்ற கூத்துகள் அரங்கேற்றப்பட்டன. (க-113)





கிளிநொச்சி இரத்தினபுரம் வர்த்தகர்களின் ஏற்பாட்டில், வீதியால் சென்றோருக்கு நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தற்காலிக ஊழியர்களுக்கு 2 வாரங்களில் நிரந்தர நியமனம்



## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு!

கொழும்பு,மே 10

**அரச திணைக்களங்களில் பல ஆண்டுகளாகத் தற்காலிக அமைய நாளாந்த, பதிலீட்டு, ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் பணி யாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கான நடவ டிக்கைகளை இரு வாரங்களுக்குள் விரைவுபடுத்துமாறு, திணைக்களங்களின் தலைவர்களுக்கு வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளார்.**

வடக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் மற்றும் மாகாணத் திணைக்களத் தலைவர்களுடனான சிறப்பு முகாமைத்துவக் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தகுதியுள்ள அனைவருக்கும் எவ்வித தாமதமுமின்றி, வழமையான நடைமுறைகளைப் பின்பற்றி இரண்டு வாரங்களுக்குள் நிரந்தர நியமனங்களை வழங்க வேண்டும். 2026 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட முன்மொழிவு மற்றும் புதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மூலம், இதுவரை நிலவிவந்த சட்டச்சிக்கல்கள் அனைத்தும் நீக்கப்பட்டுள் ளன. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி தேவைப்படும் இடத்து, அதற்கான கோரிக்கைகளை உடனடியாகச் சமர்ப்பித்து அனுமதியைப் பெற வேண்டும். அதேவேளை புதிய சுற்றறிக்கையின் கீழ் உள்ளடக்கப்பட முடியாமல் நிரந்தர நியமனம் பெறத் தகுதியற்றவர்களாக ஊழியர்கள் இருப்பின் அவர்களைக் கைவிடாது அவர்களது முழுமையான விபரங்கள் அடங்கிய பட்டியலைத் தயாரித்துச் சமர்ப்பிக்க வேண்டும். அவை தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி அவர்களுக்கான மாற்றுத்தீர்வுகள் குறித்து ஆராயப்படும்.என்றார். (க-66)

# சிறுபோகத்துக்கு உரம் தட்டுப்பாடு ஏற்படாது!

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மே 10

இம்முறை சிறுபோகத்தில் எந்தவொரு பயிர்ச்செய்கைக்கும் உரத் தட்டுப்பாடு ஏற்படாது என்று விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால் காந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது சிறுபோகத்துக்குத் தேவையான உர இருப்புக்கள் நாட்டில் உள்ளன. அவை விவசாய சேவை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சில பகுதிகளில் விநியோகத் தாமதங்கள் காணப்பட்டாலும், அவற்றைத் தீர்த்து இனிவரும் காலங்களில் எவ்விதத் தடையுமின்றி உரத்தை வழங்குவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)

# 9 இலட்சம் கடந்தது சுற்றுலாவிகள் வருகை

கொழும்பு,மே 10

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 9 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜனவரி முதலாம் திகதி முதல் மே மாதம் 6ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 904,855 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இதேவேளை, மே மாதம் முதலாம் திகதி முதல் 6ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 28,578 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)





# பருத்தித்துறை மீன் சந்தையில் விரைவில் குளிரூட்டல் அறை

யாழ்ப்பாணம்,மே 10

பருத்தித்துறை மீன் சந்தையிலுள்ள குளிரூட்டல் அறையை பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நகரசபை மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள நகரசபைக்குச் சொந்தமான பொது மீன் சந்தை வளாகத்தில் மீன்களை பதனிட்டு பாதுகாப்பாக வைக்கும் வகையில், சுமார் ஏழு மில்லியன் ரூபா செலவில், 2023ஆம் ஆண்டு இறுதியில் அமைக்கப்பட்ட குளிரூட்டல் அறை இதுவரை பயன்படுத்தப்படாதுள்ளது. இதனை இயங்குநிலைக்குக் கொண்டு வருவது தொடர்பில், சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் வியாபாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைவாக, குளிரூட்டல் அறையைப் பயன்படுத்துவது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தவிசாளர் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் உப தவிசாளர் தே.தேவராஜேந்திரன், நகரசபைச் செயலாளர் ச.பிரசாத், நகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் மீன் வியாபாரிகள் கலந்துகொண்டனர். (க-100)

# கனமழைக்கு எதிர்பார்ப்பு மன்னாருக்கு எச்சரிக்கை!



மன்னார்,மே.10

மன்னார் மாவட்டத்தில் கடும் மழையுடன் காற்று சுழற்சியும் ஏற்படும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளதால், மக்களை அவதானத்துடன் இருக்குமாறு மன்னார் மாவட்டச் செயலகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மன்னார் நகரம், நானாட்டான், மாந்தை மேற்கு, முசலி, மடு, மாந்தை மேற்கு ஆகிய பிரதேசங்களுக்கு இந்த விசேட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை எதிர்வுகூறலுக்கு அமைவாக, வடகிழக்கிலும் அரபிக் கடலிலும் ஏற்பட்டுள்ள காற்றுச் சுழற்சி காரணமாக, எதிர்வரும் 12,13,14ஆம் திகதிகளில் தென்மேற்கு மற்றும் வடமேற்குப் பிரதேசங்களிலும் அதிக மழைவீழ்ச்சி பெறுவதற்கு வாய்ப்புள்ளது. அத்துடன் மன்னார் மாவட்டம் மற்றும் அதன் தீவுப்பகுதிகளில் 100 மில்லிமீற்றர் தொடக்கம் 150 மில்லிமீற்றர் வரை மழைவீழ்ச்சி பதிவாகலாம்.

இந்தக் காலப்பகுதியில் காற்றின் வேகம் சற்று உயர்வாகவும், கடல் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

எனவே பாதுகாப்பு முன்னாயத்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாவட்டச் செயலகம் அறிவுறுத்தியுள்ளது. (க-60)

# அரச கையிருப்பு டொலர் வீழ்ச்சி

கொழும்பு,மே 10

2026 ஏப்ரல் மாதத்தில் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ கையிருப்புச் சொத்துகளின் பெறுமதி மீண்டும் 7 பில்லியன் அமெரிக்க டொலர் மட்டத்துக்குக்கீழ் வீழ்ச்சியடைந்துள்ளது.

மத்திய வங்கி வெளியிட்டுள்ள சமீபத்திய தரவுகளின்படி, 2026 மார்ச் மாத இறுதியில் 7,026 மில்லியன் டொலராகக் காணப்பட்ட மொத்த உத்தியோகபூர்வ கையிருப்புச் சொத்துகளின் அளவு ஏப்ரல் மாத இறுதியில் 6,759 மில்லியன் டொலர் வரை குறைந்துள்ளது.


கையிருப்புச் சொத்துகளின் பிரதான அங்கமான வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பும் ஏப்ரல் மாதத்தில் 6,800 மில்லியன் டொலரிலிருந்து 6,505 மில்லியன் டொலர் வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

மத்திய வங்கியின் தங்கக் கையிருப்பும் 222 மில்லியன் டொலரிலிருந்து 219 மில்லியன் டொலராகக் குறைவடைந்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

**வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கான இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும்**

50 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் உத்தரவாதத்துடனான இயந்திரங்கள்



தொடர்புகளுக்கு
021 222 2363, 077 524 4177, 077 232 3000


தொடர்புகளுக்கு
North and East Engineering
No.58, Stanly Road, Jaffna.

# காணி விற்பனைக்கு

மருதனார்மடம் - உரும்பிராய் வீதியில், மருதனார் மடம் சந்தை, ராமநாதன் கல்லூரி, ராமநாதன் அக்கடமியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் பிரதான வீதி முகப்புடன் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. அத்துடன் மருதனார்மடம், உரும்பிராய் பிரதான வீதியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் விளாத்தியடி லேனில் தார் பாதையுடன் 3 1/4, 1 3/4 பரப்புக் காணி 6 துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

CS/31773) J-1

தொடர்புகளுக்கு:- **077 225 9798**




நம்பிக்கையான திறன்மிக்க முறையில் வெளிநாடு செல்ல விரும்புபவரா?

# PRIME INTERNATIONAL EXPO - 2026

CONNECT • COLLABORATE • GROW

இற்கு வாருங்கள்.

Settle | Work | Study

STUDENT VISA | VISIT VISA | FAMILY VISA | SETTLEMENT VISA



SPOT Registrations FREE Air Ticket

Valampuri Hotel, Jaffna
**15th & 16th MAY**
09:00 am - 04.00 pm

Contact us
**076 990 83 83**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


படங்கள் ஐ. சிவசாந்தன்

# யாழ்.நகரப் பகுதியில் கொட்டித்தீர்த்த மழை

யாழ்ப்பாணம்,மே 10
யாழ்ப்பாண நகரப் பகுதியை அண்மித்த பகுதிகளில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் மழை கொட்டித் தீர்த்துள்ளது. கடந்த சில வாரங்களாக கடுமையான வெப்ப நிலைமை காணப்பட்ட நிலையில் யாழ்ப்பாண புறநகர்ப் பகுதிகளில் மழை பெய்திருந்தபோதிலும் , யாழ். பகுதியை அண்மித்த பகுதிகளில் மழை பெய்யாத நிலையில் நேற்று முன்தினம் மழை பெய்துள்ளது. (ச-17)



### இந்திரவிழாவின்போது
# சுகாதார நடைமுறையை மீறிய உணவகங்களுக்குத் தண்டம்
## 6 பேருக்குப் பிடியாணை


பருத்தித்துறை,மே 10
வல்வெட்டித்துறை இந்திரவிழாவின்போது சுகாதார நடைமுறைகளை மீறிய ஆறு உணவு கையாளும் நிலையங்களுக்கு ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபா தண்டமும் 6 உணவக உரிமையாளர்களுக்கு பிடியாணையும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப.தினேஷினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மருத்துவச் சான்றிதழ் இன்மை, கழிவு முகாமைத்துவமின்மை, தடைசெய்யப்பட்ட பிளாஸ்ரிக் பயன்பாடு என்பன விதிமீறல்களாக பதிவுசெய்யப்பட்டன. இந்த வழக்கு நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குற்றம் நிரூபிக்கப்பட்ட 6 உணவு நிலைய உரிமையாளர்களுக்கு மொத்தமாக 1,30,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறிய ஏனைய 6 உரிமையாளர்களுக்கு எதிராக நீதவான் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டார். (ச-100,422)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் நடத்திய வாராந்த நிகழ்வில், வித்துவான் க.கிருபாகரராஜாவின் தெய்வீக இசைக்கச்சேரி கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (க-17)



# த.அஜந்தகுமாரின் 3 நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம்,மே 10
த. அஜந்தகுமாரின் மூன்று நூல்கள் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு கரவெட்டிப் பிரதேசசபை கேட்போர் கூடத்தில் புலோலியூர் வேல்.நந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் வெளியீட்டுரையை க.பரணீதரன், கருத்துரைகளை கலாநிதி தி.செல்வமனோகரன், சி.ரமேஷ், ந.குகபரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.
முதற்பிரதியை திருமதி புனிதவதி சண்முகலிங்கம் பெற்றுக்கொள்ளவுள்ளார். (ச)




# பனை அபிவிருத்திச்சபையின் கண்காட்சியும், விற்பனையும்

கொழும்பு,மே 10
பனை அபிவிருத்திச்சபை நடத்திய 2026ஆம் ஆண்டுக்கான, தமிழர் பண்பாடும் பனை வளமும் என்ற தலைப்பிலான கண்காட்சியும், விற்பனையும் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சு.பிரதீப் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் பனை சார் உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் சான்றிதழ்களை வழங்கினார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபவானந்தராஜாவும் கலந்துகொண்டார். (க-17)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதரவகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் – மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் காரிய அனுகூலம் உண்டாகும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாகமுடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்துசேரும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். கணவன் –மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படும்.

**தனுசு:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மகரம்:** இன்றைக்கு உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மீனம்:** இன்று பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். சிலருக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## சாபக்கேடான பாதையில்..!

வலிகாமம் வடக்கில் இராணுவப் பிடியிலுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி கடந்த மூன்று வாரங்களாக இடம்பெற்றுவரும் பொதுமக்களின் போராட்டம் தற்போது மேலும் உச்சம்பெற ஆரம்பித்திருக்கின்றது. வலிகாமம் வடக்கு மக்களின் காணி விடுவிப்புப் போராட்டம் இன்று, நேற்று நடப்பதல்ல. கடந்த பல தசாப்தங்களாக போராட்டங்கள்தான் அந்தப்பகுதி மக்களின் வாழ்வாக மாறியுள்ளது. பிராந்தியத்தின் பொருளாதாரத்துக்கும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பங்களித்த அந்த மண்ணில் தற்போது எஞ்சியதெல்லாம் ஏமாற்றமும் போராட்டமும் தான். எனவே, தற்போது இடம்பெறும் போராட்டமும் இதன் தொடர்கதையே.

வலிகாமம் வடக்கில் மக்களின் பலநூறு ஏக்கர் விவசாயக் காணிகள், குடியிருப்புகள் என்பன தொடர்ந்தும் இராணுவத்திடம் உள்ளன. வலி. வடக்கு மக்களுக்குத் தெரிந்ததெல்லாம் விவசாயம்தான். போரால் சிதைந்த வலிகாமம் வடக்கு மக்களின் பொருளாதாரம் மீண்டும் புத்துயிர்ப்புப் பெறுவதற்கு இந்த விவசாயபூமி முதுகெலும்பு போன்றது. அதை உரிய முறையில் உரியவர்களிடம் ஒப்படைப்பது நாட்டின் பொருளாதாரத்தை வலுவாகக் கட்டமைப்பதற்கு ஒப்பான செயலாகவே அமையும். ஆனால், இராணுவக் கட்டுமானங்கள் அங்கு வலுப்பெற்று வருகின்றனவே தவிர, காணிவிடுவிப்புக்கு உரிய அறிகுறிகள் தென்படவே இல்லை. தற்சார்புப் பொருளாதாரத்தை முன்னிறுத்தி நாட்டின் பொருளாதாரப் போக்கைத் திட்டமிட்டுவரும் ஜனாதிபதி அநுர, மக்களின் காணிகளும், விவசாய நிலங்களும், விளைநிலங்களும் இன்னமும் ஏன் இராணுவப் பிடியில் உள்ளன? என்ற பரிசீலனையில் ஈடுபட வேண்டியது அவசியம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முக்கியஸ்தரான அமைச்சர் சந்திரசேகர், வலி.வடக்கு காணிகளில் கணிசமானவை ஏப்ரல் மாதம் இறுதிக்குள் விடுவிக்கப்படும் என்று கடந்த மாதங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் கூறியிருந்தார். அமைச்சரின் கருத்தை அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் பிரதியெடுத்திருந்தனர். அவர்களால் குறிக்கப்பட்ட கால அவகாசத்தை விடவும் ஒருவாரம் கடந்துள்ள போதிலும் காணிவிடுவிப்புத் தொடர்பான அடுத்தகட்டத் தகவல்கள் அரச மட்டத்தில் இருந்து வெளியிடப்படவில்லை. எனவே, அநுர அரசாங்கத்தின் ஆட்சியிலாவது இந்தக் காணிகள் விடுவிக்கப்படுமா என்பது தற்போது வினாக் குறியாகவே எஞ்சி நிற்கின்றது.

வலி.வடக்கு காணிவிடயத்தில் மட்டுமல்ல, தமிழர்களுடன் நெருங்கித் தொடர்புபடும் பல்வேறு விடயங்களில் தற்போதைய அரசாங்கம் ஊடக வெளிச்சத்தில் வாக்குறுதிகளை வழங்குகின்றது. ஆனால் அந்த வாக்குறுதிகளில் கணிசமானவை இற்றைவரை நிறைவேற்றப்படவில்லை. அரசியலமைப்பு உருவாக்கம், அரசியற்கைதிகள் விடுதலை, காணாமற்போனோர் விவகாரம், பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம் என்று பல உதாரணங்களை இதற்காகக் குறிப்பிட முடியும். வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றும் விடயத்தில் ரணில் அரசாங்கம் எவ்வாறு பசுத்தோல் போர்த்திய புலியாகச் செயற்பட்டதோ, அவ்வாறே தற்போதைய அரசாங்கமும் செயற்படத் தலைப்படுகின்றது. கடந்த அரசாங்கங்களின் ஆட்சியை சாபக்கேடு என்று விமர்சித்த தற்போதைய அரசாங்கம், அதே சாபக்கேடான பாதையில் பயணிக்கத் தலைப்படுவது ஆகப்பெரும் அபத்தம்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
**ஒன்றுநன்று உள்ளக் கெடும்**

**பொருள்:** முன் செய்த உதவி செய்தவர் பின்பு கொன்றாற் போன்ற துன்பத்தைச் செய்தாரானாலும், அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைத்தாலும் அந்தத் துன்பம் கெடும்.




## கொடபொலவில் பரவும் காய்ச்சல் வைரஸ் தொற்றெனஅடையாளம்

மாத்தறை,மே 10

**மாத்தறை மாவட்டத்தின் கொடபொல சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக் காலமாகப் பரவி வந்த காய்ச்சல் ஒரு வகை வைரஸ் தொற்று என சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.**

இது 'மெனின்ஜைடிஸ்' எனப்படும் மூளைக்காய்ச்சல் வகை வைரஸ் தொற்றாகும். கடந்த ஒரு மாத காலத்தில் 47 நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். குறிப்பாக 14 முதல் 15 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களிடையே இது அதிகமாகக் காணப்பட்டுள்ளது. கடுமையான காய்ச்சல், தாங்க முடியாத தலைவலி, வாந்தி எடுத்தல் என்பன இதன் அறிகுறிகளாகும். இந்த வைரஸானது அசுத்தமான நீர் அல்லது உணவு மூலமே பரவுகிறது என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எனவே கொதித்தாறிய நீரை மாத்திரமே பருக வேண்டும்.

உணவுகளைக் கையாளும் போதும் உட்கொள்ளும் போதும் அதிக சுத்தத்தைப் பேணவேண்டும். உரிய சிகிச்சை பெற்றால் 6 முதல் 7 நாள்களில் இந்த நோய் முழுமையாகக் குணமடையும். தற்போது புதிய நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால், மக்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## குஷ் போதையுடன் ஒருவர் சிக்கினார்!

கொழும்பு,மே 10

தாய்லாந்திலிருந்து சட்டவிரோதமான முறையில் குஷ் ரக போதைப் பொருளை நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில், சுங்கப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் தனியார் நிறுவனமொன்றின் நிதி முகாமையாளர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரின் கைப்பையைச் சோதனையிட்டபோது, அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 512 கிராம் குஷ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் மொத்தப் பெறுமதி சுமார் 51 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



## போதையுடன் ஒருவர் கைது

மாதிவெல பகுதியில் ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருள்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபரிடமிருந்து 1 கிலோ 58 கிராம் ஹெரோய்ன் மற்றும் 3 கிலோ 34 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டுள் என. (ச-இ)



## கத்திக்குத்தில் ஒருவர் கொலை

கொழும்பு.மே 10

அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பலபிட்டிய பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபருக்கும் மற்றொருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் முற்றி கொலையில் முடிந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் தப்பியோடியுள்ள நிலையில், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

கொழும்பு,மே 10

நாட்டில் நிலவும் வானிலை மற்றும் கடும் மழை காரணமாக தெதுறு ஓயா, லுணுகம்வெஹெர மற்றும் இராஜாங்கனை ஆகிய பிரதான நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் நேற்று சனிக்கிழமை திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது. தெதுறு ஓயாவில் 4 வான்கதவுகள் தலா 3 அடி வரை திறக்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக விநாடிக்கு 8,400 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெள்ள அபாயம் குறித்து அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் மேலும் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

நாளை

திங்கட்கிழமை- சித்திரை 28


11.05.2026

சுபநேரம் : 11.54 - 01.24

ராகுகாலம் : 07.24 - 08.54


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்



பிறப்பு 14 . 01 . 1952

இறப்பு 05 . 05 . 2026

## பொன்னையா திருபுரச்சந்திரன் (குகானந்தன்)

Quantity Surveyor (Oman, Dubai, Abudabi)

**உரிமையாளர்:-** Bhaavi Guest Inns

புறாடி ஒழுங்கை அரியாலையைப் பிறப்பிடமாகவும் கச்சேரி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா திருபுரச்சந்திரன் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - யோகம்மா தம்பதியரின் புத்திரனும். காலஞ்சென்றவர்களான "குட்டித்தம்பி மாஸ்ரர்" என்று அன்பாக அழைக்கப்பட்ட மயில்வாகனம் ரோகினியம்மா தம்பதியரின் மருமகனும். வசந்தி என்று அழைக்கப்படும் கலாதேவியின் அன்புக் கணவரும். பிரதீப். மயூரா. ஜோதீசன். சாம்பவி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும். சாராவின் அன்பு மாமனாரும். யஹ்யாவின் ஆருயிர்ப்பேரனும். காலஞ்சென்றவர்களான சிவயோகேஸ்வரன். உமாமகேஸ்வரி. வரலட்சுமி. யோகானந்தன். திருலோசனி. கிருபாகரன் மற்றும் கணேசானந்தன். பத்மலோசனி ஆகியோரின் சகோதரனும். காலஞ்சென்றவர்களான யோகாதேவி. வைற்றஸ். இராசலெட்சுமி. குமாரத்தியானன் மற்றும் ஸ்ரீயமுனாதேவி. மகேந்திரா. வசந்தகுமாரி. காலஞ்சென்றவர்களான தேவராசா. கணேசராசா. வாமதேவா. மற்றும் கமலாதேவி. இரத்தினேஸ்வரன். மேகலாதேவி. ஸ்ரீதேவா. மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2026) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பிற்பகல் 3.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**6, கச்சேரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்
076 473 3190**

(cs 61396) N-1

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 07 . 09 . 1935

இறப்பு 10 . 05 . 2022

யாழ். மண்டைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,
யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

## அமரர் கணபதிப்பிள்ளை அமிர்தமணி

உள்ளமுருகி எமை உயிரோடு
அரவணைத்த பண்புமிகு தெய்வமே!
பாசத்தின் உறைவிடமே
உங்களைப் பார்ப்பது இனி எக்காலம்?

காலங்கள் மாறினாலும்
கனவுகள் சென்றாலும் உங்கள் கோலமுகமும்
உதட்டோரப் புன்னகையும் என்றும் மாறாது!

ஒரு உன்னதமான தெய்வம் நீ அம்மா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்களின்
பாசத்திற்கு நாம் பட்ட கடன் தீராதம்மா
ஆனால் முழு நினைவாக
உயிர் எம்முடன் தான் இருக்குதம்மா

துன்பம் துயரம் தெரியாமல்
எம்மை எல்லாம் ஆழாத்துயரில்
ஆண்டுகள் நான்கு ஆனதம்மா
ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட இருந்தாலும்
நம் உள்ளத்தின் உள்ளே வளரும்
உங்கள் உடல் மட்டும் தான் பிரிந்து போனது

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.....**

**பிரிவால் வாடும்
குடும்பத்தினர்
க.கண்ணதாசன்** - Swiss. Burgdorf

(cs 61405) (N-1)


## மஹோற்சவம்

யாழ். மே 10

புங்குடுதீவு-ஊராதீவு-பாணாவிடை அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்பாள் சமேத ஸ்ரீ இராமலிங்கசுவாமி திருக்கோயில் பராபவ வருட மஹோற்சவம் கடந்த 2ஆம் திகதி ஆரம்பமாகியது.

எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை வரை 12 தினங்கள் மஹோற்சவம் நடைபெறும். 10ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழா இடம்பெறவுள்ளது. இவ்விழாவில் 'மஹோற்சவத்தில் ரதோற்சவம்' எனும் விடயத்தில் மதுரகவி. காரை.எம். பி.அருளானந்தன் தெய்வீகப் பேருரை ஆற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## இரத்தினம் மனோகரன்

**(உரிமையாளர்,
மனோ லைற், கோப்பாய்)**

மலர்வு 07.09.1953

உதிர்வு 22.04.2025

மின்னொளி போலும் பெயரும்
மனங்களை வென்ற தய்யா!
தண்ணொளி வீச வாழ்ந்த
நினைவுகள் இன்றும் எங்கள்
கண்வழி ஒடுது மெய்யா!
காலங்கள் நீளும் போதும்
விண்ணொளி போன்றே எங்கள்
மனமெல்லாம் வாழ்வீர் ஐயா!

**பிரதேச செயலக முன் வீதி,
கோப்பாய்**

**பிரிவால் வாடும்
அருள்மொழி
(மனைவி - லைலா)**

(cs 31778 (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆட்கள் தேவை

வயறிங் மற்றும் பைப் லைன் (பிளம்மிங்) வேலை தெரிந்தவர்கள் மற்றும் பழக விரும்பும் ஆட்கள் தேவை.

தொடர்பு: 076 182 7158, 077 810 6706

## மணமகள் தேவை

* ஆண் V லண்டன் PR 1997 திருவாதிரை, 10,இல் செவ்வாய் கிர.பா.48
* ஆண் V (யாழ்) 1998, 8ல் செவ்வாய் பூசம் கிர.பா - 25

077 044 3589

## மணமகள் தேவை

யாழ். இந்து 1992 இல் பிறந்த கொழும்பில் தொழில் புரியும் . கொழும்பில் சொந்த வீடு. வியாபார ஸ்தலங்கள் உள்ள 3 மாதத்தில் விவாகரத்தான குழந்தைகள் அற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
(வேலை எதிர்பார்க்கப்படமாட்டாது)

தொடர்பு: 077 906 1527

(CS 61403) (N-1)

## வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

இருபாலையில் வீட்டுடன் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
♦ விலை 3 கோடி

தொடர்பு: 077 848 5312

## கட்டட தொழிலாளர் ஒப்பந்ததாரர் (Building labour contractors) தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் பாடசாலை கட்டட திருத்த வேலைகள் செய்வதற்கு கட்டட தொழிலாளர் ஒப்பந்ததாரர் (Building labour contractors) தேவை.

1. மேசன் வேலை
2. தச்சு வேலை
3. அலுமினியம், வெல்டிங் வேலை
4. பெயின்ரிங் வேலை
5. வயரிங் வேலை

தொடர்புகளுக்கு:- 077 312 1328

(CS/61409) J-1

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள பெரு வெளி வயல் பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் கடந்த வியாழக்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கரடியனாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவ தற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 90 ரூபாய்.
நிலம் இழுத்து பதிக்க - 120 ரூபாய்

077 334 1281

(CR/47517) J-1

## வேலையாட்கள் தேவை

இணுவிலில் இயங்கிவரும் பான்சிக்கடை ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்பு:- 077 286 9996

## பளையில் காணி தேவை

பளையில் 1 அல்லது 2 ஏக்கர் தென்னந்தோப்புக் காணி தேவை. Whatsapp இல் தொடர்பு கொள்ளவும்.

விமல் - +61 424 296 300

## வகுப்பு

தரம் 6 - O/L வரையான வகுப்புகளுக்கு விஞ்ஞானம், கணித பாடங்கள் கற்பிக்கப்படும். (தமிழ், ஆங்கில மொழிமூலம்)

T.P: 077 639 1935

## மணமகள் தேவை

யாழ் RC மதம் 1982 ல் பிறந்த கொழும்பில் வசிக்கும் வேலைசெய்யும் மணமகனுக்கு படித்த நல்ல குடும்ப பின்னணியுள்ள மணமகள் தேவை.

தொடர்பு:- 076 041 0334

## வீடு வாடகைக்கு உடனடியாக தேவை

யாழ் நகருக்கு அருகாமையில் பிரதான வீதியை அண்டிய பிரதேசத்தில் அலுவலக பாவனைக்கு கட்டடம் தேவை. தங்குமிட வசதி விரும்பத்தக்கது.

தொடர்பு: 076 8175 692

(CS 61408)A

# தேவை

வடமாகாணத்தில் அச்சுத் துறையில் பிரலம் பெற்ற "Arissona pvt ltd" நிறுவனத்துடன் இணைந்து பணிபுரிய தங்களுக்கு அரியதொரு வாய்ப்பு.

❖ **வரவேற்பாளர் - Receptionist**
- பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்
- 21 தொடக்கம் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- கணிணி அறிவு உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- மும்மொழியிலும் பரீட்சயமானவராக இருத்தல் விரும்பத்தக்கது. முன் அனுபவம் விரும்பத்தக்கது

❖ **காசாளர் - Cashier**
- பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
- 21 தொடக்கம் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்
- கணிணி அறிவு உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் விரும்பத்தக்கது

❖ **வடிவமைப்பாளர் - Graphic Designer**
- ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
- முன் அனுபவம் விரும்பத்தக்கது
- Coral Draw, Adobe Illustrator, Photo Shop, Indesign போன்றவற்றில் பரீட்சயமானவராக இருத்தல் வேண்டும்.
- Coral Draw, Adobe Illustrator, Photo Shop, Indesign போன்றவற்றில் அடிப்படை அறிவுடன் பழக விரும்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

❖ **அச்சு இயந்திரங்களை இயக்குபவர் (Mechine Operator)**
- முன் அனுபவம் விரும்பத்தக்கது.

❖ **அலுவலக உதவியாளர் (Office Boy)**
- ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**பிற மாவட்டங்களிலிருந்து வந்து பணிபுரிய விரும்புவரிற்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.**

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிபரக் கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோபிரதி ஆகியவற்றை இணைத்து 20.05.2026 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

மின்னஞ்சல் முகவரி - arissonaa@yahoo.com
தபால் முகவரி - "Arissona pvt ltd"
91, பலாலி வீதி,
திருநெல்வேலி.

வட்சப் இலக்கம் (WatsAPP No) - 0774779450

Board of Directors of Uduvil Girls' College, Chunnakam

## VACANCY: ACCOUNTANT

The Uduvil Girls' College is a prestigious and long-established private educational institution in Jaffna, Sri Lanka, looking for an energetic, motivated, and dedicated professional to manage our financial operations, ensuring accuracy, transparency, and efficiency.

**Key Responsibilities:**
- Maintain accurate financial records and prepare timely financial statements
- Manage accounts payable, accounts receivable, and bank reconciliations
- Prepare budgets, forecasts, and financial reports
- Assist with audits and internal financial reviews

**Required Qualifications & Skills:**
- Fully qualified or part-qualified in CIMA/ACCA or CASL (Institute of chartered accountants of Sri Lanka)
- Minimum of three years' proven experience in accounting or finance.
- Age: ≤ 45 years
- Strong understanding of school accounting standards and reporting practices.
- Proficiency in accounting software (e.g. QuickBooks, Sage, or school-specific systems, etc.)
- Prior experience in educational or non-profit finance.
- Ability to work with school leadership and administrative staff.
- Experience in payroll, auditing, and financial reporting.
- Ability to finalize accounts and prepare them for submission to audit in a timely and accurate manner.

**What We Offer:** Attractive and competitive remuneration package

**Application Procedure:**
Interested candidates are invited to submit their CV to sec.uduvilbod@gmail.com on or before 25th May 2026.

***Only shortlisted candidates will be contacted for an interview.***


Secretary,
Board of Directors of Uduvil Girls' College.

(CR/47515) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15வருடங்களாகத்தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு

## விவசாய நிலங்கள் பாதிப்பு



**கிளிநொச்சி,மே.10**

**தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெத்தலியாறு பகுதிகளில் 15 வருடங்களுக்கு மேலாக சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்வதால், அருகிலுள்ள விவசாய நிலங்கள் பெரும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளன.**

குறித்த பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால், ஆற்றுப்பகுதிக்கு அருகிலுள்ள விவசாய நிலங்கள் மற்றும் ஆற்றுப்படுக்கைகள், காடுகள் மற்றும் பறவைகள் சரணாலயம் போன்ற பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. வனவிலங்குகளும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. எனவே உரிய அதிகாரிகள் குறித்த பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-113)


## விற்பனை பிரதிநிதி தேவை

மென்பான உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை பிரதிநிதி (Sales Rep) தேவை.
கொக்குவில், மானிப்பாய், யாழ். நகருக்கு அருகாமையில் வசிப்பது விரும்பத்தக்கது.
வயது எல்லை 25-55 வரை

**தொடர்பு: 077 5833045,0770783289**

(CS 31788) A

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகரில் 5Km தூரத்திற்குள் 4 நபர்கள் தங்கக்கூடிய வைத்தியர் குடும்பம் ஒன்றிற்கு சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:- **077 310 0860**

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள வீட்டில் தங்கி நின்று வீட்டு வேலை செய்ய வீட்டுப் பணிப்பெண் தேவை. அல்லது வந்து சென்றாலும் சரி.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு: 077 697 2143**

(CS 31789) A

## அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்
## விசேட பொதுச்சபைக் கூட்டம் - 2026

- **காலம் : 24.05.2026 ஞாயிற்றுக்கிழமை**
- **நேரம் : காலை 9.30 மணி**
- **இடம் : ஆலய மண்டபம்**
- **தலைமை : திரு.ந.ஸ்ரீஸ்கந்தராசா** (பரிபாலனசபைத் தலைவர்)

**நோக்கம்:-**
நடப்பாண்டு 2025 / 2026 ஆலய நிர்வாக பரிபாலனசபையில் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரின் கூட்டுப் பொறுப்பின்மை / கூட்டுப் பொறுப்பிலிருந்து விலகிச் செல்லல் போன்ற நிலைமை காரணமாகவும் அவர்களுக்கு எதிராக நிர்வாக பரிபாலன சபையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட 72% மானோர் சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாகவும் ஆராய்ந்து இறுதி முடிவு எடுப்பதற்கான விசேட பொதுச் சபைக் கூட்டம் அழைக்கப்பட்டுள்ளது.

**பொதுச்சபை உறுப்பினர்கள், மஹோற்சவ (திருவிழா) உபயகாரர்கள் மற்றும் ஏனைய உபயகாரர்கள் அனைவரையும் தவறாது பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமூகமளித்து நீடித்து நிலையான தீர்வுக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.**

**திரு.ந.ஸ்ரீஸ்கந்தராசா**
**தலைவர், பரிபாலனசபை**
**(நிர்வாகசபை)**

**இல.352, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி,**
**திருநெல்வேலி தெற்கு,**
**யாழ்ப்பாணம்.**

(cs61413) (N.1)

## வேலைக்கு ஆட்கள் தேவை

தோட்ட வேலை / வாழை தோட்டம் பராமரிக்க, கூடியவர் தேவை.
யாழ்ப்பாணம், அச்சுவேலி.
சம்பளம் : 2300/=

**தொடர்பு: 077 993 8348**

(CS 31787) A

## பணிப்பெண் தேவை

கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள வீடொன்றில் தங்கிநின்று பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை.

**077 979 6593, 075 639 8165**

## அறிவித்தல்

**மதிப்பிற்குரிய**
**Nalin Information Technologies (Pvt) Ltd**
**வாடிக்கையாளர் கவனத்திற்கு**

எமது நிறுவனத்தின் சகல கிளைகளிலும் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார்) மூன்று மாதகாலப் பகுதிக்குள் (01.02.2026 - 30.04.2026) தங்களால் திருத்த வேலைக்காக ஒப்படைக்கப்பட்ட கணினி மற்றும் கணினிசார் பொருட்களை (Warranty தவிர்ந்த) எதிர்வரும் 20.05.2026 ஆம் திகதிக்கு முன்னராக பெற்றுக் கொள்ளவும். தவறும் பட்சத்தில் தங்களால் வழங்கப்பட்ட பொருட்கள் இலத்திரனியல் கழிவாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதனை மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அப்பொருட்களிற்கு ஏற்படும் சேதங்களுக்கு எந்த வகையிலும் நிறுவனம் பொறுப்பேற்காது என்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றோம். இதற்கு முற்பட்ட காலப்பகுதியில் வாடிக்கையாளரால் மீளப்பெற்றுக் கொள்ளப்படாத பொருட்கள் ஏற்கனவே கழிவாக எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு–
எமது நிறுவனத்தில் திருத்த வேலைக்காக பொருட்களை ஒப்படைக்கும் போது இரு வாரங்களில் பொருட்களை மீளப்பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது எமது நிறுவனத்தின் நிபந்தனையாகும்.

NALIN Information Technologies Pvt Ltd.
Computers of the North

**Email - info@nit.lk**
**Contact No - 077 542 7426**
**194/2 Parameswara Junction,**
**Palaly Road, Jaffna.**

## வேலைவாய்ப்பு அறிவிப்பு
## OFNIR Construction Pvt Ltd

நம்பிக்கைக்குரிய, தரமான மற்றும் நவீன கட்டுமான சேவைகளை வழங்கும் முன்னணி நிறுவனமான OFNIR Construction Pvt Ltd நிறுவனத்திற்கு கீழ்க்காணும் பணியிடங்களுக்கு தகுதியான மற்றும் அனுபவமுள்ள நபர்கள் தேவைப்படுகின்றனர்.

**காலிப் பணியிடங்கள்**

**1. Senior Technical Officer**
- கட்டுமானத் துறையில் 3–4 வருட அனுபவம் அவசியம்.
- தள மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப அறிவு பெற்றிருக்க வேண்டும்.

**2. Technical Officer**
- கட்டுமானத் துறையில் குறைந்தது 1 வருட அனுபவம் அவசியம்.
- தளப் பணிகளை ஒருங்கிணைக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

**3. Senior Quantity Surveyor (Senior QS)**
- University of Moratuwa, Degree or தொடர்புடைய கல்வித் துறைகளில் தகுதி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- Quantity Surveying தொடர்பான அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**எங்களை பற்றி**
- தரமான கட்டுமான சேவைகள்
- அனுபவமிக்க தொழில்நுட்ப குழு
- நேர்த்தியான மற்றும் நம்பகமான பணிசெயல்
- வாடிக்கையாளர் திருப்தியை முன்னுரிமையாகக் கொண்ட நிறுவனம்

**பணியிடம்:-**

**OFNIR Construction Pvt Ltd**
**KKS Road, Kondavil East, Kondavil**
**077 502 4745**

ஆர்வமுள்ளவர்கள் தங்களின் CV-ஐ மேல்காணும் இலக்கத்திற்கு அனுப்பலாம்.

(CS/61411) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யாழ்ப்பாண பண்பாட்டுப் பெருவிழா செப்ரெம்பரில் பிரமாண்ட ஏற்பாடு!

**யாழ்ப்பாணம்,மே 10**

**யாழ்ப்பாண மாவட்டத்தின் தனித்துவமான கலை மற்றும் கலாசார விழுமியங்களைப் போற்றும் வகையிலான மாவட்ட பண்பாட்டுப் பெருவிழாவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டுப் பேரவைக் கூட்டம் மாவட்டச் செயலரும் பண்பாட்டு பேரவையின் தலைவருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போதே கூட்டத்தில் இது தொடர்பில் முக்கியமான தீர்மானங்கள் எட்டப்பட்டன.

இந்த விழாவின் போது வெளியிடப்படவுள்ள ஐந்தாவது இதழுக்காக 'நாட்டார் வழக்காறுகளும் சமூக அறிவியலும்' என்ற தலைப்பு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது.

குறித்த தலைப்பிலான கட்டுரைகள் மற்றும் ஆக்கங்களைப் பொதுமக்களிடமிருந்து வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டச் செயலர் பணிப்புரை விடுத்தார். பண்பாட்டு விழாவில் ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாகவும் கலைநிகழ்வுகளை ஒழுங்கு செய்ய கலாசார உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதன் மூலம் உள்ளூர்க் கலைஞர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. இதழுக்கான ஆலோசனைக்குழு, மதிப்பீட்டுக்குழு மற்றும் மலர்க்குழு ஆகியவற்றுக்கான உறுப்பினர்களும் இதன்போது முறையாகத் தெரிவு செய்யப்பட்டனர். கூட்டத்தில் மேலதிக மாவட்டச் செயலர் கே. சிவகரன், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ. தர்சினி, மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுணலினி விஜயரத்தினம் மற்றும் பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பல முக்கியமான உறுப்பினர்கள் பங்கேற்றனர். (ச)

முல்லைத்தீவில்

## சுற்றுலா மேம்பாட்டுக்காக 71 இடங்கள் அடையாளம்

முல்லைத்தீவு ,மே 10

முல்லைத்தீவு மாவட்டத்தை சுற்றுலா மையமாக மாற்றும் நோக்கில், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகம் இணைந்து முன்னெடுத்த விசேட ஆய்வு மற்றும் திட்டமிடலில் மாவட்டம் முழுவதும் சுற்றுலாவுக்கு உகந்த 71 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் சுற்றுலாத்துறையினை மேம்படுதுடும் நோக்கிலான கலந்துரையாடல் மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது அடையாளம் காணப்பட்ட 71 இடங்களில், தற்போதைய நிலையில் உடனடியாக அபிவிருத்தி செய்யக்கூடிய மற்றும் சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்க்கக்கூடிய 10 இடங்கள் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட 10 இடங்களையும் அபிவிருத்தி செய்யும் போது எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. மாவட்டத்தின் சுற்றுலாத்துறை சார்ந்த விடுதி உரிமையாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகளின் கருத்துக்களும் பெறப்பட்டன. (ச)

வவுனியாவில்

## பிரஜா சக்திக் குழுக்கள் ஊடாக 505 கிராமங்களில் திட்டங்கள்

வவுனியா,மே 10

வவுனியா மாவட்டத்தின் கிராமப்புறக் கட்டமைப்புகளை வலுப்படுத்தும் நோக்கில், அரசாங்கத்தின் 'பிரஜா சக்தி' தேசிய திட்டத்தின் கீழ் 535.95 மில்லியன் ரூபா மதிப்பிலான அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவது குறித்த விசேட கலந்துரையாடல் வவுனியா மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் வன்னி மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும் கூட்டுறவு அபிவிருத்திப் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தெரிவிக்கையில்,

இந்தத் திட்டத்துக்கு வவுனியா மாவட்டத்துக்காக 535.95 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் ஏற்கனவே 102 பிரஜா சக்திக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் வவுனியாவின் 505 கிராமங்கள் உள்ளடங்கும் வகையில் அபிவிருத்திப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. கிராமப்புற மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். குறிப்பாக கிராமியப் பாதைகள், குடிநீர் வசதிகள் மற்றும் ஏனைய பொதுக் கட்டமைப்பு வசதிகளுக்கு இதில் முன்னுரிமை வழங்கப்படும்- என்றார். (ச)



## யோஷிதவுக்கு எதிரான வழக்கில் மே 14 ஆட்சேபனைத் தீர்மானம்!

கொழும்பு,மே 10

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் புதல்வர் யோஷித ராஜபக்சவுக்கு எதிராகப் பணச்சுத்திகரிப்புத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் முக்கியமான தீர்மானம் எதிர்வரும் மே 14ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

யோஷித ராஜபக்ச தரப்பால் முன்வைக்கப்பட்ட ஆரம்பகட்ட ஆட்சேபனைகள் குறித்த தனது முடிவே அன்றையதினம் அறிவிக்கவுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உதேஷ் ரணதுங்க அறிவித்துள்ளார். (ச-இ)

நாடளாவிய ரீதியில்

## சிறுவர் துஷ்பிரயோகங்கள் 4,421 வழக்குகள் நிலுவை!!

கொழும்பு,மே 10

இலங்கை முழுவதும் உள்ள 34 மேல் நீதிமன்றங்களில் 4,421 சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகள் விசாரணையில் உள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு பின்னர் நீதிமன்ற நடவடிக்கை வரை கொண்டு செல்லப்பட்ட குற்றங்கள் மட்டுமே இந்தப் புள்ளிவிவரங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

அதன்படி காலி மேல் நீதிமன்றத்தில் 467, களுத்துறை மேல் நீதிமன்றத்தில் 267, கம்பஹா மேல் நீதிமன்றத்தில் 231, மாத்தறை மேல் நீதிமன்றத்தில் 212 போன்ற எண்ணிக்கைகளில் வழக்குகள் விசாரணையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



சுன்னாகம் வலி.தெற்கு பிரதேச சபையின் உப அலுவலக ஆளுகைக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கான சத்துணவு வழங்கும் நிகழ்வு சுன்னாகம் கிழக்கு சிவன் முன்பள்ளியிலும் இடம்பெற்றது.

நிகழ்வில் தவிசாளர் தி.பிரகாஷ், உப தவிசாளர் உதயகுமாரன், கௌரவ உறுப்பினர்கள் வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரச நிறுவனங்கள் அலட்சியம் 2.5 மில்லியன் டொலர் மாயம்

## பொது நிதியியல் குழு அறிக்கை

கொழும்பு,மே 10

**அரச நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புச் சீர்குலைவே 2.5 மில்லியன் டொலர் காணாமல் போனமை அல்லது மோசடி செய்யப்பட்டமைக்குக் காரணம் என பொது நிதியியல் குழுவின் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.**

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டின் வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவுகள் மற்றும் நிலுவைகளை உறுதிப்படுத்துவதில் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு இடையே மிகப்பெரிய இடைவெளி நிலவுகிறது.

அரச நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுக்கு இடையே தரவுகளைப் பகிர்ந்து கொள்வதில் நிலவும் குளறுபடிகளே இந்த 2.5 மில்லியன் டொலர் மாயமானதற்குக் காரணமாகும். பொதுக்கடன் மேலாண்மைச் சட்டத்தின்படி, அனைத்து அறிக்கையிடல் பணிகளும் 'பொதுக் கடன் மேலாண்மை அலுவலகத்திடம்' இருக்க வேண்டும். ஆனால், இன்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் இந்தப் பணிகளில் தலையிடுவது குழப்பத்தை விளைவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி இந்த விவகாரத்தில் தனது பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது.

மத்திய வங்கியின் பொதுக் கடன் திணைக்களம், இப்புதிய அலுவலகத்திற்கு 2026 ஜனவரி வரை ஆதரவளித்து வந்தது. நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு மேலாளர் என்ற ரீதியில், திறைசேரியின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைக் கண்காணிக்கத் தவறியது மத்திய வங்கியின் பலவீனத்தையே காட்டுகிறது.

இந்த நிதி மோசடி குறித்து நிதி அமைச்சகம் உடனடியாக விரிவான விசாரணையை ஆரம்பிக்க வேண்டும். இதற்கான முழுமையான அறிக்கை 2026 மே மாத இறுதிக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்- என்றுள்ளது. (ச-இ)

# அமெரிக்காவின் 14 அம்ச அமைதித் திட்டம் பரிசீலனையில் ஈரான்!

தெஹ்ரான்.மே 10

அமெரிக்காவின் 14 அம்ச அமைதித் திட்டத்தை பரிசீலித்துவருகிறோம் என்று ஈரான் வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, ஈரான் இடையே கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி முதல் போர் நடைபெற்று வந்தது. கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி இரு தரப்பு இடையே போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. இந்தச்சூழலில் போருக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க 14 அம்ச அமைதித் திட்டத்தை அமெரிக்கா முன்மொழிந்துள்ளது. அடுத்த 15 ஆண்டுகளுக்கு யுரேனியத்தை செறிவூட்டக்கூடாது. தற்போது கையிருப்பில் உள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை அமெரிக்காவிடம் வழங்கவேண்டும். ஹார்முஸ் ஜலசந்தியை முழுமையாகத்திறக்கவேண்டும். இந்த நடவடிக்கைகளுக்குப் பதிலாக அமெரிக்காவின் பொருளாதார தடையால் முடக்கப்பட்ட ஈரானின் சொத்துகள், நிதி ஆதாரங்கள் விடுவிக்கப்படும் என்பன உள்ளிட்ட 14 அம்ச திட்டத்தை அமெரிக்கா முன்மொழிந்திருக்கிறது.

இதுகுறித்து ஈரான் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவிக்கையில்,

"அமெரிக்காவின் அமைதித் திட்டத்தை தீவிரமாக பரிசீலித்துவருகிறோம். எங்களது முடிவை பாகிஸ்தான் மூலம் அமெரிக்காவுக்கு தெரிவிப்போம்" என்றார்.

அதேவேளை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், "ஈரானுடன் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தை நடைபெற்றுவருகிறது. அந்த நாட்டுடன் சுமுக உடன்பாடு எட்டப்பட வாய்ப்பிருக்கிறது. 48 மணி நேரத்துக்குள் ஈரான் முடிவு எடுக்கவேண்டும். ஒருவேளை அமைதி உடன்பாடு எட்டப்படவில்லை என்றால் ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும். ஈரான் நரகமாக மாறும்" - என்றார். (ச-இ)

# சுற்றிவளைப்பு; 540 பேர் கைது

கொழும்பு,மே 10

பொலிஸ் மாஅதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸார் விசேட சுற்றிவளைப்பில் ஈடுபட்டபோது, 540 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை கைது செய்யப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 248 பேரும், திறந்த பிடியாணை களுக்கமைய 134 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)



# வியட்நாம் நாட்டுக்கு நேரடி விமானசேவை

கொழும்பு,மே 10

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையே நேரடி விமானச் சேவைகளை வியட்நாம் எயார்லைன்ஸ் இந்த ஆண்டு தொடங்கும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த வியட்நாம் ஜனாதிபதி டோ லாம் உம், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் இணைந்து பங்கேற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இதனைக் குறிப்பிட்டார். (ச-இ)

# சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,மே.10

சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் செ.நிஷான், தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் உதவிப்பிரதேச செயலாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த வருடம் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நிறைவடைந்த பின்னர், சாவகச்சேரி நகரசபையின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டு 11 மாதங்கள் நிறைவடைந்த நிலையில், தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளராக கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

அதேவேளை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர், சாவகச்சேரி நகரசபையின் செயலாளராக நியமிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (க28)



# மேசைப்பந்தாட்டப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம்,மே.10

யாழ்ப்பாணக் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுக்குட்பட்டோருக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன் பெற்றது. யாழ்.இந்துக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில், சென்.பற்றிக்ஸ் கல்லூரி யாழ். இந்துக் கல்லூரியை வெற்றி பெற்று, யாழ்ப்பாண கல்வி வலய சம்பியனானது. அரையிறுதி ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரியை வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





## கோடிக்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையின் மருந்துக் களஞ்சியத் தில் நேற்று அதிகாலை 1.30 மணி யளவில் தீவிபத்து ஏற்பட்டது. சம்ப வம் தொடர்பில் தகவல் வழங்கப்பட் டதும், யாழ்ப்பாணம் மாநகரசபையி னர், பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் கடற்படையினர் என அனைத்துத் தரப்பினரும் மிகத் துரி தகதியில் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்தக் கூட்டு நடவடிக்கையின் பயனாக ஏனைய கட்டடங்களுக்குத் தீ பரவாமல் தடுக் கப்பட்டது. எனினும், ஐந்து மணிநே ரப் போராட்டத்தின் பின்னரே தீ முற்றாகக் கட்டுக்குள் கொண்டுவரப் பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தீப்பரவல் ஏற் பட்ட பகுதி குற்றப் பிராந்தியமாக அறிவிக்கப்பட்டு பொலிஸ் பாது காப்பு வழங்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக அரச இரசா யன பகுப்பாய்வு திணைக்கள அதி காரிகள் கொழும்பிலிருந்து நாளை வரவுள்ளனர். அவர்களின் நடவடிக் கைக்குப் பின்னரே தீ விபத்துக்கான காரணம் தொடர்பில் உறுதியான தகவல்கள் தெரியவரும். தீவிபத்து ஏற்பட்ட பகுதிகளை அமைச்சர் சந் திரசேகர், வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் நேற்றுப் பார்வையிட்ட னர். (அ-ம-26)

என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடப் பீடாதிபதியும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாக முத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று அவர் வெளி யிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள் ளதாவது:-

வங்காள விரிகுடாவின் தென்மேற்கு பகுதியில் இலங்கைக்கு தென்கி ழக்கே நிலவும் காற்றுச் சுழற்சி, காற் றழுத்த தாழ்வு மையமாக இன்று மாற்றம்பெறவுள்ளது. அது நாட்டின் வடக்கு, கிழக்கு கரையோரங்கள் ஊடாக வடக்கு நோக்கி நகரவுள்ளது. இதனால், வடக்கு, கிழக்கு மாகாணங் களில் தற்போது நிலவும் மழையுட னான காலநிலை இன்றுமுதல் பரவ லடையும் வாய்ப்புகள் அதிகரித்துள் ளன. இந்த மழையுடனான கால நிலை எதிர்வரும் 13ஆம் திகதிவரை தொடரும்.

அத்துடன், இந்தக் காற்றழுத்த தாழ்வு நிலையால் இலங்கையின் ஊவா மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம், வடமேல் மாகாணம், மேல் மாகாணம் என்பவற்றின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைக்கும் - என்றுள்ளது. (அ-ம-26)

## விஜய்....

நடிகர் விஜய் தலைமையிலான தமி ழக வெற்றிக் கழகத்துக்குப் பெரும் பான்மை கிடைத்துள்ள நிலையில், இன்று காலை தமிழக முதல்வராக விஜய் பதவியேற்கவுள்ளார்.

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் தமிழக வெற்றிக்கழகம் 108 தொகுதி களைக் கைப்பற்றி அபார வெற்றி பெற்றது. ஆட்சியமைப்பதற்குத் தேவையான 118 தொகுதிகள் என்ற இலக்கை எட்டுவதற்கு அந்தக் கட்சி கடந்த நான்கு நாள்களாகக் கடும் முயற்சிகளை மேற்கொண்டது. எனி னும் பெரும்பான்மை நிரூபிக்கப் படா ததால் ஆட்சியமைப்பதற்கு ஆளுநர் அனுமதி வழங்கவில்லை.

காங்கிரஸ் கட்சி விஜய்க்கு ஏற்கனவே ஆதரவு வழங்கியிருந்த நிலையில், கம்யூனிஸ்ட் கட்சிகள் நேற்றுமுன்தி னமும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நேற்றும் விஜய்க்கு தமது ஆத ரவை அறிவித்தன. இதனால், தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியமைப்பதற் குத் தேவையான பெரும்பான்மை கிடைத்துள்ளது.

பெரும்பான்மைப் பலத்துடன் நேற்று மாலை தமிழக ஆளுநரை விஜய் சந்தித்துள்ளார். விஜய் ஆட்சிய மைக்க தமிழக ஆளுநர் அனுமதி வழங்கியுள்ள நிலையிலேயே இன்று காலை அவர் தமிழக முதல்வராக பொறுப்பேற்கவுள்ளார். (அ-ம)

## போதனாவின்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையின் மருந்துக் களஞ்சிய சாலை எரிந்து அழிந்துள்ள போதி லும், பொதுமக்களுக்கு சிரமம் இல் லாத வகையில் சேவையை முன்னெ டுக்க முடியும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் தீப்பரவல் ஏற்பட்டதும் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் கணிச மான மருந்துப் பொருள்களை நாங் கள் பத்திரமாக மீட்டோம். இதன்படி 12 லொறிகள் (லோட்) மருந்துப் பொருள் கள் பிறிதொரு இடத்தில் சேமிக்கப்பட் டுள்ளன. அத்துடன், கொழும்பிலி ருந்து எட்டு லொறிகளில் மருந்துப் பொருள்கள் வருகின்றன. எனவே, மருந்துப் பொருள்களின் இருப்பு உறுதி செய்யப்படும்.

இந்தத் தீப்பரவல் மேலும் ஆபத்தாக மாறியிருக்கக்கூடிய அனைத்துச் சாத்தியங்களும் இருந்தன. எனினும், இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸார், தீயணைப்புப் படையி னர் மற்றும் மருத்துவமனைப் பணி யாளர்கள் மிகச்சிறப்பாகச் செயற் பட்டு தீயைக் கட்டுக்குள் கொண்டுவந் தனர்.

அழிவடைந்த மருந்துப் பொருள்க ளின் பெறுமதி தொடர்பில் தற்போது உறுதியான தகவல்களைத் தெரி விக்க முடியாது. விரைவில் அது தொடர்பான உத்தியோகபூர்வ மதிப் பீடுகள் இடம்பெற்று மத்திய சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்ப டும். அந்த அறிக்கையை அவர்கள் முறைப்படி வெளியிடுவார்கள். அதன் பின்னர் நாமும் அது தொடர்பில் வெளிப்படுத்துவோம் - என்றார். (அ-ம-26)

## நேற்றும்...

செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து நேற்று ஒரு என்புத் தொகுதி அடையா ளம் காணப்பட்டது என்றும், ஐந்து என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழி மீதான மூன் றாம்கட்ட அகழ்வு நடவடிக்கையின் 12ஆம் நாள் பணிகள் நேற்று இடம் பெற்றன. இதன்போதே ஒரு என்புத் தொகுதி புதிதாக அடையாளம் காணப் பட்டதுடன், ஏற்கனவே அடையாளம் காணப்பட்டவை உட்பட 5 என்புத்தொ குதிகள் மீட்கப்பட்டன. இதன்படி, செம் மணிப் புதைகுழிக்குள் இருந்து இது வரை 261 என்புத்தொகுதிகள் அடை யாளம் காணப்பட்ட நிலையில் அவை அனைத்தும் அகழ்ந்து எடுக்கப் பட்டுள்ளன.

நேற்றைய நாளுடன் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளன. ஜூன் மாதம் முதலாம் திகதி அகழ்வுப்பணி மீண் டும் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கடந்த 12 நாள்களாக இடம்பெற்ற மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளில் 21 என்புத் தொகுதிகளும், நாணயக் குற்றிகள், மூக்குத்தி போன்ற ஆபர ணம், ஆணிகள், மஞ்சள்நிற வளை யல்துண்டு உள்ளடங்கலாக 17 சான் றுப் பொருள்கள் மீட்கப்பட்டு அவை நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள் ளன.

பேராசிரியர் ராஜ் சோமதேவ தலை மையிலான குழுவினர் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற னர். நீதவான் எஸ்.லெனின்குமார் அகழ்வுப் பணிகளைக் கண்காணித்து வருகின்றார், காணாமல் ஆக்கப்பட் டோர் அலுவலகத்தின் சார்பில் பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட் டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி நிரஞ்சன் ஆகியோர் அகழ்வுப் பணிகளின்போது முன்னி லையாகி வருகின்றனர் என்பது குறிப் பிடத்தக்கது. (அ-ம-26)

## இன்றுமுதல்...

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்றுமுதல் கனமழை பதிவாகும்

## பொம்மர்ஸ்...

கரவெட்டி பிரதேசசெயலரால் பொம் மர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் பொதுக்கூட்டம் இன்று நடத்தப்படவி ருந்தநிலையில், அந்தக் கூட்டத்துக்கு 14 நாள்கள் இடைக்காலத் தடைவி தித்து வடமாகாண மேல்நீதிமன்ற நீதிபதி ஆ.கி.அலெக்ஸ்ராஜா உத்தர விட்டார்.

வடமாகாண விளையாட்டுத் திணைக் களப் பணிப்பாளரின் அறிவுறுத்த லுக்கு அமைவாக, பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் பொதுக் கூட்டம் இன்று நடைபெறவிருந்தது. இதற்கு எதிராக வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் செயலாளரால் வடமாகாண மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொட ரப்பட்டது. இந்த வழக்கு நேற்றுமுன் தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையிலேயே, கரவெட்டி பிரதேச செயலரால் நடத்தப்படவிருந்த பொம் மர்ஸ் விளையாட்டுக்கழக பொதுக் கூட்டத்துக்கு வடமாகாண மேல்நீதி மன்ற நீதிபதி ஆ.கி.அலெக்ஸ்ராஜா தடைவிதித்து உத்தரவிட்டார்.

தன்னார்வ நிறுவனமொன்றின் பொதுக்கூட்டம் அதன் யாப்பு அடிப்ப டையிலேயே இடம்பெற வேண்டும். அத்துடன், பிரதேசசெயலகத்தின் கூட்டம் தொடர்பான அறிவிப்புக்கு முன்னர் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் தமது பொதுக்கூட்டம் தொடர் பில் பத்திரிகைகளில் விளம்பரம் செய் திருந்தது. எனவே, இரு முரண்பாடான நிலைப்பாடுகள் தொடர்பில் சட்டத்தர ணிகள் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்தே இந்த இடைக்காலத் தடை யுத்தரவு விதிக்கப்பட்டது. பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் சட்டத்தரணிகளான வி.திருக்குமரன், ம.மயூரன், தி.சதீசன் ஆகியோர் முன் னிலையானார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தோட்டத்தொழிலாளர்கள் மீதான தாக்குதல்களை ஏற்கமுடியாது:

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு!



கொழும்பு, மே 10
தோட்டத்தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்திய தோட்ட அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத்தரப்பினர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், இவ்வாறான தாக்குதல்களை ஏற்றுக்கொள்ளமுடியாதென வும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.


நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக் கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த மாதம் 21ஆம் திகதி கஹவத்தை நீலகாமம் தோட்டத்தில் சட்டவிரோத குடியிருப்பை அகற்றுவதற்காக பாதுகாப்புத் தரப்பினர் செயற்பட்டபோது தொழிலாளர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் 11 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர். இந்த வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மொக்கா தோட்டத்தில் புதன்கிழமை தோட்ட முகாமையாளர் ஒருவர், சமையல் பணியில் ஈடுபடும் சிவகுமார் என்ற தொழிலாளரை கன்னத்தில் அறைந்துள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய தோட்ட முகாமையாளர் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள் ளார். நுவரெலியா, மஸ்கெலியா உடபுஸ்ஸல்லாவ பகுதியில் டெல்டா தோட்டத்தில் புதன்கிழமை இரவு தோட்ட உப அதிகாரி, தோட்டத்தொழிலாளியான ஸ்ரீதரன் என்பவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். இவரும் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார். இவ்வாறான தாக்குதல் சம்பவங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. சட்டம் அனைவருக்கும் பொதுவானது. தோட்ட அதிகாரி உட்பட அனைவரும் சட்டத்துக்குக் கட்டுப்பட வேண்டும்-என்றார். (எ-இ)

# ராஜஸ்தானை வீழ்த்தி குஜராத் முன்னேற்றம்!



ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், ராஜஸ்தானை வீழ்த்தி அபார வெற்றிபெற்றது குஜராத். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கில் 84 ஓட்டங்களையும், சாய் சுதர்சன் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு அதிரடி வீரரான சூரியவன்ஷி 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். மத்திய வரிசையில் ஜடேஜா பெற்ற 38 ஓட்டங்களே அதிகபட்சம். மளமளவென விக்கெட்டுக்கள் சரிய அந்த அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. 77 ஓட்டங்களால் குஜராத் அணி வெற்றிபெற்றது.

பந்துவீச்சில் ரசிட்கான் 4 விக்கெட்டுக்களையும், ஜேசன் ஹோல்டர் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இந்த வெற்றியைத் தொடர்ந்து புள்ளிப் பட்டியலில் இரண்டாம் இடத்துக்கு குஜராத் அணி முன்னேறியுள்ளது. (ம)


## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 02 . 1939



இறப்பு 09 . 05 . 2026

### இராமலிங்கம் ஐயா பரமேஸ்வரி அம்மா

சரசாலையைப் பிறப்பிடமாகவும் சரசாலை மற்றும் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் ஐயா பரமேஸ்வரி அம்மா நேற்று (09.05.2026) சனிக்கிழமை சிவஐக்கியம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையாக்குருக்கள் இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், கதிரமலை ஐயா பறுவதம் அம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராமலிங்கம் ஐயாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தர ஐயா, இராசநாயகக்குருக்கள், லோகநாதன் ஐயா, கணபதிப்பிள்ளை ஐயா மற்றும் யோகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஸ்ரீதரக்குருக்கள் (மனோ ஐயா), ஸ்ரீரங்கக்குருக்கள் (சிவா ஐயா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரஞ்சினி அம்மா மற்றும் சுகந்தினி அம்மாவின் பாசமிகு மாமியாரும், அகிலா (பிரான்ஸ்), அகில்ராஜ் (பிரதேசசபை கொடிகாமம்), வினுஜா (HNB), அக்ஷயராம், அனீஸ்வராம் ஆகியோரின் அப்பம்மாவும், ஆருத்ராவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2026) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொடிகாமம் கட்டை பறித்தான் இந்து மயானத்தில் சமாதி வைக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மடத்தடி வீதி,
கொடிகாமம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 923 2490 (சிவா ஐயா)
077 175 1020 (மனோ ஐயா)

(CR 47519)A



## மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 06 . 1938



இறப்பு 09 . 05 . 2026

### யோகராசா நாகேஸ்வரி

சுதுமலை வடக்கை பிறப்பிடமாகவும் வடலியடைப்பு பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட யோகராசா நாகேஸ்வரி நேற்று (09.05.2026) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் செல்லமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - சின்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற அப்புத்துரை யோகராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா (கமலம்), திருநாவுக்கரசு, விமலநாயகி, கோமளம் மற்றும் திரு. தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்சினி (லண்டன்), யோகினி (ஆசிரியர், யா/சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க.), கஜந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரணவநாதன் (லண்டன்), கயலவன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழிற்துறை திணைக்களம், வ.மா), சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், P.விரோஷன் (லண்டன்), P.ஆயகி (லண்டன்), P.விதுரன் (லண்டன்), K.அபிலாஸ், K.அஸ்விதா, S.பூஜா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2026) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 12.30 மணியளவில் பண்டத்தரிப்பு விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பூம்பத்தை வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 077 6914080

(CS 31780)A


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

* கனடாவுக்கு
விரைவு | அதிவிரைவு | கப்பல்
* லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு
விரைவு | அதிவிரைவு | சாதாரண

பொதிகள் சேவைகள் தற்போது வழமைபோன்று நடைபெறுகின்றன.

* லண்டனுக்கு மாம்பழம், பலாப்பழம் அனுப்புவோர் இந்தவாரம் ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் அனுப்பலாம்.
* உள்நாட்டுப் பொதிகள் சேவையும் நடைபெறுகின்றது.

தொடர்புகளுக்கு 075 330 5500

விரைவு - பாதுகாப்பு - நம்பிக்கை


# 21 மாவட்டங்களுக்கு மின்னல் எச்சரிக்கை!

மேற்கு, சப்ரகமுவ, மத்திய, வட மேற்கு, வடமத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களிலும், அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார் மற்றும் வவுனியாமாவட்டங்களிலும்பலத்தமின்னல் தாக்கம் ஏற்படக்கூடும் என வானிலை அவதானிப்பு நிலையம் எச்சரித்துள்ளது. நாட்டின் 21 மாவட்டங்களுக்கு அதிதீவிர மின்னல் தொடர்பான சிவப்புஎச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. ஏனைய 4 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மின்னல் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள பொதுமக்கள் மின்னல்ஏற்படும்போது திறந்த வெளிகளிலோ அல்லது மரங்களுக்கு அடியிலோ நிற்பதைத் தவிர்க்கவும். வயல்வெளிகள், நீர் நிலைகள் மற்றும் விளையாட்டு மைதானங்களில் இருப்பதைத் தவிர்க்கவும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் உணவகம் ஒன்றிற்கு கொத்து, றைஸ் உணவு பரிமாறுபவர்கள் தேவை.

தொடர்பு:- 077 203 0625

## வீடுகள் வாடகைக்கு

இரண்டு வீடுகள் வாடகைக்கு உண்டு. நல்லூர் கோவிலில் இருந்து 500m தூரத்தில் 4 அறைகளுடன் நவீனமயப்படுத்தப்பட்ட வீடுகள் வாடகைக்கு விடப்படும்.

077 306 8993, 077 401 6079

(CS/61772) N-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் 04 நிலபரப்பு காணி விற்பனைக்கு

- 16 அடி பதையுடன் ஒரு பரப்பாகவும், ஒன்றரை பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- சாவகச்சேரி நகரத்தில் இருந்து **1 1/2km** தூரத்தில்
- **A-9** வீதியில் இருந்து **300 m** தூரம் சிவபூமி பாடசாலை **200 m** தூரம்
- சாவகச்சேரி வேலாயுதம் வீதியில் (சிவபூ பாடசாலை வீதி)
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி, நன்னீர் ஊற்று நிலம்
- நகர சபை சிறுவர் விளையாட்டு பூங்கா **400 m** தூரத்தில்
- ஒரு பரப்பின் விலை முன் பகுதிகள் **1500000/=** பதினைந்து இலட்சம் ரூபாய் முதல் **1300000/=** பதின்மூன்று இலட்சம் வரை
- பார்வையிடும் நேரம்: காலை 9.00 தொடக்கம் மாலை 6 வரை

**தொடர்பு:- 0772880152 0767390413**

(CS 31782) A

# உதவியாளர்கள் தேவை

ஜெயம் றியல்எஸ்ரேட் பிறைவட் லிமிட்ட்
**Jeyam Real Estate (Pvt) Ltd**
நிறுவனத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு உதவியாளர்கள் தேவை.

1. கணனி தட்டச்சாளர், போட்டோ கொப்பி இயந்திரம் இயக்குநர்.
2. அலுவலக உதவியாளர் (ஆண்/ பெண்)
3. வாகன சாரதி (ஆண்/பெண்) - 35 வயதிற்கு மேற்பட்டோர்.
4. JCB வாகனம் இயக்குநர்.
5. இரவுக் காவலாளிகள்.

நேரில் சமூகம் தரும் நேரம் :
காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு :
ஜெயம் றியல் எஸ்ரேட் (பிறைவட்) லிமிட்டட்
இல - 151/4, இராசபாதை வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இலக்கம்:
**077 814 7389, 077 986 5457**

(CS/31781) J-1

## காணி விற்பனைக்கு


யாழ்ப்பாணம் அச்சுவேலி மடத்தடி சந்திக்கு அருகாமையில் இருபத்தி ஒரு பரப்பு காணி மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உள்ளது.

- நீண்ட கால அறுதி உறுதி ஆவணங்களுடன்
- நல்ல சூழல்
- அச்சுவேலி பஸ்ராண்ட் **500m**, ஆஸ்பத்திரி **800m**,
- தரகர் தேவையில்லை
- பார்வை நேரம்: காலை 8.30 முதல் மாலை 6.30 மணிவரை.

தொடர்பு: **077 623 4204**

(CS 31784) A


# மரண அறிவித்தல்



பிறப்பு 13 . 06 . 1944
இறப்பு 09 . 05 . 2026

## உயர் திரு. விஸ்வலிங்கம் யோகரத்தினம்

**(முன்னாள் எழுதுவினைஞர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம், கல்வித்திணைக்களங்கள், நுவரேலியா, சிலாபம், யாழ்ப்பாணம்)**

காரை நகரைப் பிறப்பிடமாகவும், கந்தரோடை மற்றும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு. விஸ்வலிங்கம் யோகரத்தினம் அவர்கள் நேற்று (09.05.2026) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - ஞானசுந்தரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முகாந்தரம் SP இராசநாயகம் - பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், ஓய்வுபெற்ற வலிகாமவலய ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், சுஜிதா (கனடா), சுனீத்ரா (அதிபர் யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி), Dr.சிவசொரூபன் (புத்தளம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜமோகன் (கனடா), சூரியராஜா (பிரதிப் பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ நிலையம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), அருள்நிதி (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, ஆனைமடு, புத்தளம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆரபி (கனடா), ஆதிரை (கனடா), ஆரணி (கனடா), சாகித்தியன் (பல் மருத்துவபீட மாணவன் - பேராதனை பல்கலைக்கழகம்), சதுர்வேதியன், சிவசாயினி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், அச்சுதன், ஸ்ரீகரணி, தரணிதரன் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, கனகரத்தினம் (ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்), சபாரத்தினம், ராஜேஸ்வரி (கனடா), Dr.விஜயரத்தினம் (குழந்தை வைத்திய நிபுணர், கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பரமலிங்கம், புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பவளம், சதாசிவம், இராமச்சந்திரன், இந்திராணி மற்றும் ஸ்ரீமதி, ரஞ்சன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.05.2026) ஞாயிற்றுக் கிழமை கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (11.05.2026) திங்கட்கிழமை மு.ப 9.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**இல. 25, முதலாம் ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

(CS/61416) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் வேலையாள் தேவை

யாழ் நகரில் கடை ஒன்றில்
8.00 am - 05 -30 pm மணிவரை
18 -30 வயதுடைய பெண் வேலையாள்
தேவை. சம்பளம் 50000/-

(cs.61398) (N-1)

**077 937 0000, 075 988 1000**

## ஆண் வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள செல்லப்பிராணிகள்
விற்பனை செய்யும் கடைக்கு ஆண் வேலையாள் தேவை.
சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு.
சம்பளம் 60,000/- - 70,000/- வழங்கப்படும்.

**077 937 0000, 075 988 1000**

## English Classes - Spoken - Grammar

Grade 7 - GCE O/L, A/L, பட்டதாரிகள்,
International School Students
K.Ganesh B.A யாழ் கந்தர்மடம்

**077 766 8725**

## வேலையாட்கள் தேவை

கே.கே.எஸ் வீதி, சிவன்
கோயிலுக்கு அருகாமையில்
அமைந்துள்ள பான்சி
கடையொன்றிற்கு பான்சி மற்றும்
கொஸ்மெட்டிக் அனுபவம் உள்ள
ஆண், பெண் வேலையாட்கள் தேவை.
சம்பளம் - 30,000/- முதல் 50,000/- வரை

**Suba Sree Gold Covering**
383, K.K.S Road, Jaffna
தொடர்புகளுக்கு:-

(CS/61373) J-1

**076 646 1089, 076 201 3384**

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 24 . 04 . 1939

ஆண்டவன் அடியில் 03 . 05 . 2026



### மார்க்கண்டு சபித்தாதேவி

சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் கிழக்கு, வைரவர் புளியங்குளம் வவுனியா, நல்லூர் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பிள்ளை என அழைக்கப்படும் மார்க்கண்டு சபித்தாதேவி அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை 03.05.2026 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாதவர் மார்க்கண்டு (Prision Jailor மற்றும் கலாபூசணம்) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.05.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.30 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

435/55, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 885 1409
077 883 9625

(CS61392) N-1

## மணமகள் தேவை

41 வயதுடைய கனடாவில்
வசிக்கும் (PR) உடைய
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
கண்பார்வையற்ற மணமகனுக்கு
மணமகள் தேவை.

(CS/61394) J-1

Whatsapp / Viber
**0044 757 862 6565**

## ஆண் வேலையாட்கள் தேவை

ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள
பல்பொருள் வாணிபத்திற்கு
அனுபவம் உள்ள வேலையாட்கள்
தேவை.

நாளொன்றிற்கு 3500/-
EPF, ETF உள்ளடங்கும்

வருட இறுதியில்
Bonus 300000/-
நிபந்தனைகளுக்கு உட்பட்டவை.

(cs.61406) (N-1)

**076 9652 868**

## Vacancy

**2 vacancy for Draftsman at**
**Unistruct Consulting Engineers pvt ltd.**

Qualifications :-
minimum 2-years work experience in
RC & steel drawing and Revit modelling

**1 Vacancy for Architect at**
**Unistruct Consulting Engineers pvt ltd.**

Job Title :- Assistant architect/ Entry level Architect
Qualification:- Degree or Diploma in Architecture,
Basic knowledge in CAD and Revit.
Good communication skill to refer and
understand Singapore authority Standards.
3D knowledge/ BIM is preferred.
Working place- Manipay, Jaffna.

Forward the CV to unistruct15@yahoo.com
on before 15th of May 2026

## பெயின்ரர் தேவை

நல்லூரில் அமைந்துள்ள
விற்பனை நிலையமொன்றிற்கு
சீமெந்து, கதிரைகள், மேசைகள்,
சிலைகளுக்கு பெயின்ட்
பண்ணக்கூடிய ஆண் ஒருவர்
தேவை.
நல்ல சம்பளம் வழங்கப்படும்.

(cs61386)

**T.P.: 076 826 7703**

## வீடு விற்பனைக்கு

நீர்வேலி வடக்கு இராச வீதியில்
இருந்து 50 m தொலைவில்
5 பரப்புக் காணியும் வீடும்
விற்பனைக்கு உண்டு.

whatsapp: Telephone **077 252 3155**

## மணமகள் தேவை

U.K. குடியுரிமை உடைய 1980 (V) விவாகரத்தான
பொறியியலாளர் மணமகனுக்கு
பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
தொடர்புகளுக்கு:
**இ.சபாரெத்தினம்**
Phone: 00441923829607 (U.K.).
Viber:00447411059950 (U.K)

(CS/61372) N-1

## மாபெரும் இலவச கருத்தரங்கு



**"குழந்தையின்மைக்கான ஆலோசனைக் கருத்தரங்கு"**

அரிய வாய்ப்பு

வைத்திய நிபுணருடன் சந்திப்பு
ஆலோசனையூடாக தீர்வு !

காலம் :- 30.05.2026 சனிக்கிழமை
காலை 09.0 மணி தொடக்கம்
பிற்பகல் 02.00 மணி வரை

முன்பதிவுகளுக்கு:-
**074 412 9791**
**074 412 9792**

இடம்:- **ஆரியா கிளினிக்**
95, 97, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம்,
யாழ்பாணம்.

(CS/61414) J-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காக்கைதீவு சந்தைக்கு எதிரே, யாழ்ப்பாணம், காரைநகர்
செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன் 54 பரப்புக்காணி
விற்பனைக்கு உண்டு.

- மூன்று, மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் அனைத்துக் காணிகளும் காபற் வீதி முகப்புடன்.
- பரம்பரை ஆவணங்கள் 1940ம் ஆண்டிலிருந்து உறுதி, தோம்பு சரியான முறையில் உள்ளது.
- யாழ் பஸ் நிலையம் 2Km தூரம்
- வீடு, கடைகள், திருமணமண்டபம், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும், சகல வியாபார நிலையங்களும் அமைப்பதற்கும் உகந்த இடம்.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-

(CS/31782) J-1

**076 977 2341, 077 988 6389, 076 077 2674**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered

மலை : 34 வள்ளுவர் ஆண் ... த்திரை 27 ஞாயிற்றுக்கிழமை (10.05.2026) சிகரம் :191

> வெறிமிகுந்த மணவாளன் நடு இரவில் வீடுவந்து
> நெறிமனையாள் உணவுவைக்கும் இடம்மறந்து – உறியினிலே
> ஆட்டுக்குக் கரைத்துவைத்த பிண்ணாக்கைப் பிட்டென்று
> போட்டுப் பிடித்தானே பார்
>
> ஆனையூர்க்கவிராயர்



# விஜய் என்ன தருவார்?

○ நிலாந்தன்

இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாகக் காணப்படும் ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக வரக்கூடிய ஒருவரின் தேர்தல் வெற்றியை அநேகமான குடும்பங்களில் உள்ள மூத்தவர்கள், சிறியவர்கள், குழந்தைகள் உட்பட அனைவரும் விசில் ஊதிக் கொண்டாடிய காட்சி தமிழகத்தில் மட்டும்தான் இடம்பெறுமா? அல்லது உலகில் வேறு எங்காவது இடம்பெற்றதுண்டா ?

தாங்கள் வாக்களிக்க முடியாத ஒரு தேர்தல் களத்தில் முதலீடு செய்யும் ஈழத்தமிழர்களைப்போல அரசற்ற மக்கள் கூட்டங்கள் உலகில் வேறு எங்காவது உண்டா?

அயல்நாடு ஒன்றில் தெரிவு செய்யப்பட்ட ஒரு முதலமைச்சருக்காக ஒரு நாட்டின் நாடாளுமன்றத்தில் மூன்றுக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள்; எதிர்பார்ப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் 'அந்த அயல்நாட்டு முதலமைச்சரிடம் கச்சதீவையும் ஒப்படைக்கவேண்டும் ;யாழ்ப்பாணத்தையும் ஒப்படைக்கவேண்டும்' என்ற பொருள்பட நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருக்கிறார்.

அதேசமயம்,இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா,கொழும்பில் "உலகளாவிய புத்தாக்கம் மற்றும் தலைமைத்துவ" மாநாட்டில் உரையாற்றும்போது, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே தரைவழிப் பாலம் ஒன்றை அமைக்கும் திட்டத்தைக் குறித்து மீண்டும் வலியுறுத்திப் பேசியுள்ளார்.

"பாக்கு நீரிணைக்குக் குறுக்கே ஒரு பாலம் அல்லது சுரங்கப்பாதை வழியாக தரைவழி இணைப்பு ஏற்படுத்துவது குறித்து பல தசாப்தங்களாக விவாதிக்கப்பட்டு வருகின்றது.உலகம் முழுவதும் இதுபோன்ற வழித் தடங்களுக்குப் போதுமான எடுத்துக் காட்டுகள் உள்ளன.அதன் பொறியியல் நன்கு அறியப்பட்டுள்ளது.அதன் பொருளாதாரம் கவர்ச்சிகரமானது. இதுபோன்ற பாலங்கள் எங்கு கட்டப்பட்டிருந்தாலும்,அதன் நன்மைகள் மறுக்க முடியாதவை. ஆனால் நாம் தொடர்ந்து தயங்குகின்றோம். அதனால் நான் தெளிவாகச் சொல்கின்றேன்,தயக்கம் காட்டிக் கொண்டிருப்பதற்கான காலம் முடிந்துவிட்டது."

மேற்கண்டவாறு கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் உரை நிகழ்த்திய அதே காலப்பகுதியில்,மூன்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சருக்கு வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

தமிழ்ப்பகுதிகளில் விஜயின் ரசிகர்கள் அவருடைய வெற்றியை அமோகமாகக் கொண்டாடுகிறார்கள்.கொண்டாட்டங்களில் அவர்கள் யூரியூப்பர்களுக்கும் ஊடகங்களுக்கும் தெரிவிக்கும் கருத்துக்கள் தாங்க முடியாதவைகளாக இருக்கின்றன.எமது தமிழ்க் கட்சிகள் தமிழ் இளையோரை அரசியல் மயப் படுத்துவதற்காக எவ்வளவு கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும் என்பதை அவை காட்டுகின்றன. அவர்கள் ரசிகர்கள் அப்படித்தான் கதைப்பார்கள். தமிழ்நாட்டிலும் அப்படித்தான் ரசிகர்கள் கதைக்கிறார்கள். ஆனால் ஈழத்தமிழ் ரசிகர்கள் தமிழ்நாட்டில் யார் முதலமைச்சராக வரவேண்டும் என்பதனை தீர்மானிக்க முடியாது.மாறாக தமிழக ரசிகர்கள் தீர்மானிக்கலாம்.அதனால்தான் விஜய் வென்றிருக்கிறார்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக யார் வர வேண்டும் என்பதை தமிழக மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அது அவர்களுடைய விருப்பத் தெரிவு. இதில் அயலவர்களாகிய ஈழத்தமிழர்கள் என்ன செய்யலாம்? யார் முதலமைச்சராக வந்தாலும் ஈழத்தமிழர்கள் அவரோடு தமது நலன் சார்ந்து இடையூடாட வேண்டும்.தமிழகத்துக்கு யார் முதலமைச்சர் என்பது தமிழக மக்களின் விருப்பம்.அந்த விருப்பத்தை ஈழத்தமிழர்கள் மதிக்க வேண்டும்.அந்த அடிப்படையில் தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சரோடு ஈழத்தமிழர்கள் தமது நலன்சார் நோக்கு நிலையில் இருந்து இடையூடாட வேண்டும்.அப்படித்தான் புதுடில்லியில் யார் ஆட்சிக்கு வந்தாலும், ஈழத்தமிழர்கள் அந்த ஆட்சியோடு இடையூடாட வேண்டும்.

தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சர் இந்திய மாநிலம் ஒன்றின் முதலமைச்சர். அவர் இந்தியாவின் அரைச் சமஷ்டி (Quasifederal) அரசியலமைப்புக்கு உட்பட்டவர்.இந்தியாவின் அரசியலமைப்பின்படி அவர் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளில் எதுவரை தலையிடலாம் என்பதில்,எதுவரை செல்வாக்குச் செலுத்தலாம் என்பதில் அடிப்படையான வரையறைகள் உண்டு. எனவே ஈழத் தமிழர்கள் தொடர்பான இந்தியாவின் கொள்கைகளில் ஒரு தமிழ்நாட்டு முதலமைச்சர் எந்தளவுக்கு மாற்றங்களை ஏற்படுத்தலாம்?

இதற்கு எம்.ஜி.ஆர். ஒரு சிறந்த உதாரணம்.எம்.ஜி.ஆர். செய்யமுடியாத ஒன்றை எந்த ஒரு முதலமைச்சரும் ஈழத் தமிழர்களுக்கு செய்துவிட முடியுமா ?

எம்.ஜி.ஆர். தமிழகத்தின் பலமான ஒரு முதலமைச்சராக இருந்தவர்.அவருடைய காலத்தில்தான் முதலாம் கட்ட ஈழப்போர் நடந்தது. அக்காலகட்டத்தில்தான் ஈழ விடுதலை இயக்கங்களுக்கு தமிழ்நாடு பின்தளமாகத் திறக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் எம்.ஜி.ஆருக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவருக்கும் இடையிலான நட்பு வளர்ந்தது.அது ஓர் அரசியல் உறவு என்பதற்குமப்பால் தனிப்பட்ட நெருக்கமாக வளர்ந்தது. எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு என்னென்ன உதவிகள் செய்தார் என்பதனை அந்த இயக்கத்தின் மூத்த உறுப்பினர்கள் வெளிப்படையாகச் சொன்னால்தான் தெரியவரும்.தமிழகத்தின் முதலமைச்சராக அவர் தன்னுடைய அதிகாரத்துக்கு அப்பாற்பட்டு உத்தியோகப்பற்றற்ற விதத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அள்ளி வழங்கியதாகத் தகவல்கள் உண்டு.அவருக்கும் அந்த இயக்கத்துக்கும் இடையிலான தனிப்பட்ட நெருக்கந்தான் பின்னாளில் அந்த இயக்கத்துக்கும் கலைஞர் கருணாநிதிக்கும் இடையிலான உறவின் தன்மையையும் தீர்மானித்தது என்று சொல்லலாம்.


முதலாம் கட்ட ஈழப்போரின் முடிவில், இந்திய-இலங்கை உடன்படிக்கை உருவாக்கப்பட்ட காலகட்டத்தில்,எம்.ஜி.ஆர். நோயாளியாகிவிட்டார்.எழுந்து நடக்கச் சிரமப்பட்டார். இந்திய-இலங்கை உடன்படிக்கை எழுதப்பட்ட பின் அது தொடர்பான எதிர்ப்புக்கள்,சர்ச்சைகள்,விமர்சனங்களின் மத்தியில் தமிழகத்தில் ஒரு பெரிய கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.அக்கூட்டத்திற்கு எம்.ஜி.ஆர். அழைத்து வரப்பட்டிருந்தார்.மேடையில் பேசிக்கொண்டிருந்த ராஜீவ் காந்தி ஒரு கட்டத்தில் எம்.ஜீ.ஆரை கைத்தாங்கலாக மக்கள் முன் அழைத்து வந்தார்.எம்.ஜீ.ஆருடைய கையை தன்னுடைய கையினால் தூக்கி,உயர்த்திப் பிடித்து இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு எம்.ஜீ.ஆரும் சம்மதம் என்று பொருள் கொள்ளத்தக்க விதத்தில் எம்.ஜீ.ஆரின் கையைத் தன்னுடைய கையோடு சேர்த்து அசைத்தார்.

தான் மிகவும் நேசித்த ஓர் இயக்கம்,தன்னால் ஊட்டி வளர்க்கப்பட்ட ஓர் இயக்கம், தன்னுடைய இறுதிக் காலத்தில் தன்னுடைய நாட்டுப் படையினரோடு மோதும் ஒரு நிலைமை உருவாகி வருவதை எம்.ஜீ.ஆர். தடுக்க முடியாதவராக பார்த்துக் கொண்டிருந்தார்.அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களே அவரைப் போல விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு நெருக்கமாகச் சிந்திக்கவில்லை.

யாழ். நகரம் இந்திய அமைதி காக்கும் படையினரிடம் வீழ்ச்சியுற்ற இரண்டு மாதங்களில், 1987 டிசம்பர் 24 ஆம் திகதி எம்.ஜீ.ஆர். உலகை நீத்தார். எம்.ஜீ.ஆரால் முடியாத ஒன்றை இனி எந்த ஒரு முதலமைச்சரும் செய்துவிட முடியாது என்பதுதான் தமிழக யதார்த்தம்.ஏனென்றால் எம்.ஜி.ஆர். தமிழகத்தின் அதாவது இந்தியாவின் ஒரு மாநிலத்தின் முதலமைச்சர்.அதேசமயம் ஈழ விடுதலை இயக்கம் ஒன்றின் தலைவருக்கு தனிப்பட்ட முறையில் மிக நெருக்கமானவர்.தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு தாயகத்துக்கு வெளியே அதிகம் உதவிய ஓர் அரசியல் தலைவராக அவரைத்தான் குறிப்பிடலாம்.அப்படிப்பட்ட எம்.ஜீ.ஆராலேயே இந்திய-இலங்கை உடன்படிக்கை மீது நிர்ணயகரமான விதத்தில் செல்வாக்குச் செலுத்த முடியவில்லை.அந்த உடன்படிக்கையின் பின்னரான விளைவுகளைக் கட்டுப்படுத்தவும் முடியவில்லை . இந்தியாவின் அரைச் சமஷ்டிக் கட்டமைப்புக்குள் அங்குள்ள மாநிலம் ஒன்றின் முதலமைச்சரால் உத்தியோகபூர்வமாக செய்யக் கூடியது அவ்வளவுதான்.அதேசமயம் தமிழ்நாட்டு வெகுசனம் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகக் கொந்தளித்தால்,அது அந்த மாநிலத்தின் முதலமைச்சருக்கு நிர்ப்பந்தங்களைக் கொடுக்கும். அது புதுடில்லி மீது தமிழகம் கொடுக்கக்கூடிய நிர்பந்தங்களைத் தீர்மானிக்கும். ஆனால் அங்கேயும் ஒரு முன்நிபந்தனை உண்டு.ஈழத் தமிழர்கள் கொந்தளிக்காமல் தமிழகம் எப்படிக் கொந்தளிக்கும்? ஈழத்தமிழர்கள் தங்களுடைய அரசியல் இலக்குகளுக்காக தாங்கள்தான் போராட வேண்டும்; தாங்கள்தான் நொதிக்க வேண்டும்; தாங்கள்தான் கொந்தளிக்க வேண்டும். ஈழத்தமிழர்கள் தங்களுக்காக தாங்கள்தான் போராட வேண்டும்.தாங்கள் நொதிக்காமல் தமிழகம் நொதிக்க வேண்டும் என்று எப்படி ஈழத்தமிழர்கள் எதிர்பார்க்கலாம்? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சஞ்சீவி
10 மே 2026



# செம்மணி விவகாரம் சாட்சியங்களை ஐ.நா. ஒஸ்லாப் திரட்டுகிறதா?

## ஆதாரங்களை அறிவியல் ரீதியாக ஆவணப்படுத்தத் தவறும் தமிழ்த்தரப்பு

அ.நிக்ஸன்

ஐ.நா.வின் இலங்கைக்கான பொறுப்புக்கூறல் திட்டத்தின் (OSLap) கீழ் இயங்கும் 'சாட்சிய சேகரிப்புப் பொறிமுறை', தனது பணிக்காலத்தை 2027 ஆம் ஆண்டு வரை நீடித்துள்ள சூழலில், செம்மணி மற்றும் அரியாலை சித்துப்பாத்தி போன்ற மனிதப் புதைகுழிகளில் இருந்து கண்டெடுக் கப்படும் தடயவியல் சான்றுகளை உன்னிப் பாகத் திரட்டி வருகிறது.

எதிர்கால சர்வதேச பொறுப்புக்கூறல் நடவடிக் கைகள் மற்றும் நீதி விசாரணைகளுக்காக இவை முறையாக ஆவணப்படுத்தப்பட்டு வருவதாக கொழும்பிலுள்ள ஐ.நா. வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் பேரவையில் 2022 இல் நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானம். பெரி யளவில் ஈழத்தமிழர்களுக்கு ஏற்புடையதாக இல்லை என்றாலும், ஒஸ்லாப் எனப்படும் 'இலங்கை பொறுப்புக்கூறல் திட்டம்' (Sri Lanka Accountability Project) இன்று வரை சாட்சியங்களைத் திரட்டி வருகிறது.

2024 ஒக்ரோபரில் இந்த ஒஸ்லாப் சாட்சியப் பொறிமுறையின் கால அவ காசம் 2027 ஆம் ஆண்டு வரை நீடிக் கப்பட்டு முள்ளது. தற்போது 60/1 தீர்மா னமாக இது அழைக்கப்படுகிறது. இந் தத் தீர்மானத்தின் பந்தி 8 இல், "இலங்கைத் தீவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான சான்று களைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பாது காத்தல்" என்ற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் 2023 - 2024 ஆண்டுகளில் சமர்ப்பித்த அறிக்கைகளில் இலங் கையில் அகழ்ந்து எடுக்கப்படும் புதைகுழிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் புதைகுழிகளை வெறும் குற்றச்சாட்டாக பார்க்காமல், 'அறிவியல் ரீதியான தடயங் கள்'என ஆணையாளர் வகைப்படுத்தியுள்ளார்.

தற்போது செம்மணியில் கண்டெடுக்கப்பட்டுள்ள குழந் தைகளின் எலும்புக்கூடுகள் மற்றும் விளையாட்டுப் பொருள்கள் தொடர்பான தரவுகளை ஒஸ்லாப் பொறி முறை ஏற்கனவே கவனத்தில் எடுத்துள்ளதாக கொழும்பு ஐ.நா. அலுவலகத் தகவல்கள் கூறுகின்றன. செம்மணி, மன்னார், கொக்குத்தொடுவாய் போன்ற இடங்களில் அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்கள், பாதிக்கப்பட்டவர் களின் உடைகள், மற்றும் துப்பாக்கித் தோட்டாக்கள் போன் றவற்றின் நிழற் படங்கள் மற்றும் வீடியோக்கள் சேகரிக் கப்பட்டுள்ளன. அதேவேளை, மன்னார் சதொச புதைகு ழியில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளில் 6 எலும்புக் கூடுகள் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத் தில் உள்ள "பீட்டா அனலிடிக்" (Beta Analytic Inc.) என்ற கார்பன் பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பப்பட் டிருந்தன.

2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பீட்டா அனலி டிக் நிறுவனம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. அதில், அந்த எலும்புகள் கி.பி. 1499 முதல் 1719 வரை அதாவது, போர்த்துக்கேயர் காலப் பகுதிக்குரிய பழமையானவை என குறிப்பிட்டிருந்தது. ஒரே புதை குழியில் மிக நெருக்கமாகக் கண்டெடுக்கப்பட்ட எலும்புகளின் காலக்கணிப்பில் சுமார் 231 ஆண்டுகள் வித்தியாசம் இருப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஆனால், புதைகுழி அகழ்வுப் பணியில் ஈடுபட்டிருந்த தடயவியல் தொல்பொருள் ஆய் வாளரான பேராசிரியர் ராஜ் சோமதேவா, அமெரிக்க அறிக்கையை முழுமையாக ஏற்க முடியாது என மன்னார் நீதிமன்றத்தில் வாதிட்டிருந்தார்.

ஒரு குறுகிய இடத்தில் புதைக்கப்பட்ட உடல்களுக்கு இடையே பெரிய இடைவெளி சூழல் (Context of Deposition) அமைந்திருப்பது அறிவியல் ரீதியாக சாத்தி யமற்றது என அவர் வாதிட்டிருந்தார். அத்துடன், உடல்கள் முறையான ஒரு மயானத்தில் புதைக்கப்பட்டவை அல்ல. மாறாக ஒன்றன் மேல் ஒன்றாக எறியப்பட்ட நிலையில் இருந்தன. பல எலும்புகள் கைகள் கட்டப்பட்ட நிலையில் அல்லது உடைக்கப்பட்ட நிலையில் இருந்தன. இது ஒரு போர் அல்லது வன்முறைச் சூழலில் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டதை காட்டுவதாக ராஜ் சோமதேவா அப் போது சுட்டிக்காட்டியி ருந்தார். மன்னார் நிலப்பகுதியில் உள்ள மண்ணின் இரசாயனத் தன்மை அல்லது கடலோ ரக் காற்றின் தாக்கம் காரணமாக 'கார்பன்14' பரிசோத னையில் பிழையான முடிவுகள் வர வாய்ப்புள்ளதாக அவர் சந்தேகமும் எழுப்பியிருந்தார். எலும்புகளுடன் கண்டெடுக்கப்பட்ட துணித் துண்டுகள், சில பிளாஸ்ரிக் பொருள்கள் அந்த எலும்புகள் கி.பி 1500களில் புதைக் கப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்பதற்கான நேரடிச் சான் றுகளாக அவராலும், ஏனைய நிபுணர்களாலும் அப்போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. பேராசிரியர் ராஜ் சோமதேவா மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் சட்டத்தரணிகள் முன் வைத்த வாதங்களை மன்னார் நீதிமன்றம் ஏற்றுக் கொண் டது.

ஆனாலும், மன்னார் சதொச விவகாரம் தற்போது சட்ட ரீதியான தேக்க நிலையில் உள்ளது. கொழும்பு அரசியல் அழுத்தம் காரணமாக இருக்கலாம். அதேநேரம், கொழும் பில் உள்ள இராஜதந்திரிகள் செம்மணி அரியாலை சித் துப்பாத்தி மனிதப் புதைகுழியை நேரில் அவதானிக்கலாம் என யாழ். நீதவான் நீதிமன்றம் சென்ற ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி அதிகாரபூர்வ அனுமதி வழங்கியது. ஆனால், இராஜதந்திரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்ட போதிலும், நிதி ஒதுக்கீடு, நிர்வாகப் பிரச்சினைகள் காரணமாக, அகழ் வுப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப் படாமல் இருந்தன. அத்துடன் மழைநீர் தேங்கி நின்ற காரணங்க ளினாலும் அகழ்வுப் பணிகள் தற் காலிகமாக நிறுத்தப்பட் டன. இத னால் இராஜதந்திரிகளின் வருகை யில் தாமதம் ஏற்பட்டது. ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி முதல் அகழ் வுப்பணி ஆரம்பிக்கப்பட்டு நடை பெற்று வருகிறது. ஆனால், இன்று வரையில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம், கொழும்பில் உள்ள இரா ஜதந்திரிகள் அழைத்து வரப்பட வில்லை. அதேவேளை, அகழ்வுப் பணிகள் ஒரு சட்ட மருத்துவ அதிகா ரியினதும், நீதவானினதும் கட்டுப் பாட்டில் இடம்பெறுவதால், அரசி யல் பிரதிநிதிகள் நேரடியாகத் தலை யிடுவது நீதிமன்ற அவமதிப்பு அல் லது சாட்சியங்களைச் சிதைத்தல் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாக லாம் என்ற அச்சம், தமிழ்த் தேசி யக் கட்சிகளிடம் உள்ளது. அத்து டன், அநுர அரசாங்கம் பதவிக் காலத்தில் கடுமையான சர்வதேச அழுத்தங்களைக் கொடுப் பது, புதிய பேச்சுவார்த்தை வாய்ப்புகளைப் பாதிக்கும் என்ற ஒரு தவறான இராஜதந் திர மதிப்பீடு தமிழ்த் தேசியக் கட்சி உறுப்பினர்கள் சிலரிடம் உள்ளது. மன்னார் 'சதொச' புதைகுழியில் நடந்தது போல, ஆரம்பத் திலேயே உரிமை கோரி விட்டுப் பின்னர் கார்பன் பரிசோதனையில் முடிவுகள் மாறினால், அது அரசியல் செயற்பாடுக ளின் நம்பகத்தன்மையை குறைத்து விடும் என்ற தவறான எச்சரிக்கை உணர்வும் சில உறுப்பினர்களிடம் உண்டு. ஆனால், ஒஸ்லாப் எனப் படும் ஐ.நா. சாட்சியப் பொறிமுறை, சர்வதேசத் தடயவியல் நிபுணர்களின் கருத்துகளைப் பெற்று அவற்றை ஆவணப் படுத்தி வருவதாகவும், சேகரிக்கப்படும் ஆதாரங்கள் சிதைக்கப்படாமல் இருப்பதையும், ஒஸ்லாப் பொறிமுறை பேணுவதாகவும் ஐ.நா. தகவல்கள் கூறுகின்றன.


ஆகவே, தமிழர் தரப்பும் மனித உரிமை அமைப்புகளும், செம்மணி அரியாலை சிந்துபாத்தியில் கண்டெடுக்கப்ப டும் ஒவ்வொரு தடயத்தையும், குறிப்பாக படங்கள் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கைகளை அதிகாரபூர் வமாக ஐ.நா.வின் ஒஸ்லாப் பொறிமுறைக்கு மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது ஐ.நா. மனித உரிமைகள் அலுவ லகத்தின் இணையத்தளம் வழியாகவோ சமர்ப்பிக்க முடி யும். அத்துடன், மன்னார் சதொச மனித எலும்புக்கூடுகள் பற்றிய அமெரிக்க ஆய்வு நிறுவனத்தின் முரண்பாடான அறிக்கைகள், அது பற்றி ராஜ் சோமதேவா மன்னார் நீதி மன்றத்தில் சுட்டிக்காட்டிய நியாயமான கருத்துக்களையும் ஒஸ்லாப் சாட்சியப் பொறிமுறைக்கு அனுப்பலாம். ஆனால், இது பற்றிய எந்தவொரு அணுகுமுறைகளும் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் இருப்ப தாக தெரியவில்லை. தற்போது நடை பெற்று வரும் அகழ்வில், 250 இற்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள், குழந்தை களின் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு வருவதால், இப்பகுதியை ஒரு 'குற்றவியல் விசாரணை வலயமாக' பிரகடனப்படுத்துமாறு, தமிழ்த் தேசியக் கட்சி கள் நாடாளுமன்றத்தில் கோரலாம். சென்ற ஆண்டு ஓகஸ்ட் மாதம், தமிழ் தேசியக் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இணைந்து ஐ.நா.வுக்கு அனுப்பிய கடிதத்தில், செம்மணி உள்ளிட்ட புதைகுழிகளின் சாட்சி யங்களைப் பாதுகாக்க 'சர்வதேச தொழில்நுட்ப உதவி மற்றும் மேற்பார்வை' அவசியம் என வலியுறுத்தினர். அங்கு கண்டெடுக்கப்படும் குழந்தைகளின் எலும்புக்கூடு கள் மற்றும் விளையாட்டுப் பொருள்கள் இலங்கையில் நடந்த 'இன அழிப்புக்கான' நேரடி ஆதாரங்கள் என்பத தால், இதனை வெறும் குற்றவியல் வழக்காகப் பார்க்கா மல் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கட்சி களின் சில உறுப்பினர் வாதிட்டு இருந்தனர். அகழ்வுப் பணிக்கான நிதியை ஒதுக்குமாறு வலியுறுத்தியதால். 2.1 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. செம்மணி அகழ்வுப் பணி களை சர்வதேச இராஜதந்திரிகள் பார்வையிடும் சூழலைப் பயன்படுத்தி, இதனை ஓர் 'இன அழிப்பின் சாட்சியமாக' அங்கீகரிக்கக் கோரி சர்வதேச நாடுகளிடம் அழுத்தம் கொடுக்க முடியும்.

## குற்றவியல் விசாரணை வலயமாக பிரகடனம் செய்ய வேண்டும் என வலியுறுத்தத் தவறும் தமிழ்த் தேசியக் கட்சிகள்




(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணிக்குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் பாதுகாவலன் ஆசிரியர்

## அருட்பணி எஸ்.எயின்சிலி றொஷான்

இ. அலெக்ஸ் அமலரட்ணம்.

*'ஆண்டவர் தாம் திருப்பொழிவு செய்தவருக்கு வெற்றி தருகிறார். தூய விண்ணகத்தில் இருந்து அவருக்குப் பதில் அளிக்கிறார். வெற்றியளிக்கும் தமது வலக்கரத்தின் ஆற்றலைக் காட்டுகின்றார்'*

(திரு. பாடல் 20:06)

இந்த விவிலிய வரிகளுக்குச் சாட்சியாக, கால் நூற்றாண்டு காலமாகத் தனது குருத்துவப் பணியால் இறைவனுக்கும் சமூகத்திற்கும் நறுமணம் சேர்த்து வருபவர் அருட்பணி எஸ். எயின்சிலி றொஷான் அடிகள். சோதனைகள், விமர்சனங்கள், போர்ச் சூழல்கள் என அனைத்தையும் கடந்து, அவர் காணும் இந்த வெள்ளி விழா, இறைவனின் அருட்பொழிவுக்குக் கிடைத்த அங்கீகாரம்.

**ஆனைக்கோட்டையின் முதல் குருமணி: பிறப்பும் கல்வியும்**

யாழ். மறைமாவட்டம், ஆனைக்கோட்டைப் பங்குத் திருஅவையின் 'முதற் குருமணி' என்ற பெருமைக்குரியவர் இவர். செபஸ்ரியாம்பிள்ளை அருள்மணி தம்பதியருக்கு மூத்த மகனாக 1970இல் பிறந்தார். தந்தை காவல்துறை அதிகாரி என்பதால், இவரது ஆரம்பக் கல்வி பொல்காவெலவில் தொடங்கியது. பின்னர் போர்ச் சூழலால் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

இறைவனின் அழைப்பை உணர்ந்த றொஷான் அடிகள், 1991இல் புனித மடுத்தீனார் குருமடத்தில் இணைந்தார். மெய்யியல் மற்றும் இறையியலில் இளங்கலைப் பட்டங்களைப் பெற்ற இவர், 2001 மே 07இல் ஆயர் பேரருட்தந்தை தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.

**முதல் திருப்பலியும்... ஒரு பேரிழப்பும்...!**

குருத்துவ வாழ்வின் தொடக்கத்திலேயே ஒரு பெரும் துயரத்தைச் சந்தித்தார். குருவான ஒரு மாதத்திலேயே இவரது பாசமிகு தந்தை இறைபதமடைந்தார். தான் குருவாக வழங்கிய முதல் 'நோயில் பூசுதல்' அருளடையாளமும், முதல் 'நல்லடக்கத் திருப்பலியும்' தனது தந்தைக்கே அமைந்தது இவரது வாழ்வில் மறக்க முடியாத உருக்கமான நிகழ்வாகும்.

**பன்முக ஆளுமை: கல்வி மற்றும் சமூகப் பணி**

றொஷான் அடிகள் ஒரு சிறந்த கல்விமான். இந்தியாவிலும் இங்கிலாந்திலும் உயர்கல்வி கற்று ஊடகவியல் மற்றும் கல்வியியலில் இரண்டு முதுகலைமாணி (MA/M.Ed) பட்டங்களைப் பெற்றவர்.

கல்விப்பணி: புனித கென்றியரசர் கல்லூரி மற்றும் புனித பத்திரிசியார் கல்லூரிகளில் உப அதிபராகவும், விடுதிக் காப்பாளராகவும் பணியாற்றி மாணவர்களின் ஒழுக்கத்தையும் கல்வியையும் செதுக்கினார். போர் மேகங்கள் சூழ்ந்திருந்த 2003-2009 காலப் பகுதியில் யாழ் ஆயரின் செயலாளராக மிகக் காத்திரமான பங்கினை ஆற்றினார். மும்மொழிகளிலும் புலமை பெற்றிருந்ததால், இராணுவ நெருக்குவாரங்களுக்கு மத்தியில் மக்களுக்காகப் பரிந்துரைக்கும் 'தூதுவராகச்' செயற்பட்டார். சுனாமி அனர்த்தத்தின் போது இவர் ஆற்றிய மீட்புப் பணிகள் மகத்தானவை.

**'பாதுகாவலன்' இதழில் ஒரு புரட்சி**

ஊடகவியல் துறையில் இவருக்கு இருந்த புலமை, யாழ் மறைமாவட்டத்தின் பாரம்பரியமிக்க 'பாதுகாவலன்' பத்திரிகைக்குப் புத்துயிர் அளித்தது. கறுப்பு வெள்ளையில் வெளிவந்த பத்திரிகையை நவீன 'டிஜிற்றல்' தொழில்நுட்பத்துடன் வர்ணப் பதிப்பாக மாற்றிய பெருமை இவருக்கு உண்டு. பாதுகாவலன் பத்திரிகையின் 150ஆவது ஆண்டும், இவரது 25ஆவது குருத்துவ ஆண்டும் இணைந்து வருவது ஒரு தெய்வீகத் தற்செயல்.


**மறைபரப்புப் பணியும் சமாதான நீதவான் சேவையும்**

தற்போது திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகளின் இயக்குநராகப் பணியாற்றும் இவர், சிறுவர்கள் மற்றும் இளையோர் மத்தியில் விசுவாசத்தை வளர்ப்பதில் தீவிரம் காட்டி வருகிறார். இவரது சமூகப் பங்களிப்பைப் பாராட்டி, அரசாங்கம் இவரை 'அகில இலங்கை சமாதான நீதவானாக' நியமித்துள்ளது. போர்க்காலத்தில் யாழ். குடாநாட்டிற்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருள்களைக் கப்பல் மூலம் கொண்டுவர இவர் எடுத்த முயற்சிகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை.

"நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை; நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்" என்ற கிறிஸ்துவின் வாக்குக்கேற்ப, கடந்த 25 ஆண்டுகளாகப் பணிவாழ்வில் தடம் பதித்து வரும் அருட்பணி எயின்சிலி றொஷான் அடிகள், தனது விசுவாசப் பயணத்தைத் தொடர்கிறார். திருஅவைக்கும், சமூகத்திற்கும், தமிழ் இனத்திற்கும் இன்னும் பல ஆண்டுகள் இவர் நற்பணி ஆற்ற இறைவனை வேண்டி வாழ்த்துகிறோம்!




## செம்மணி....



(02ஆம் பக்கம் தொடர்ச்சி)

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) இலங்கைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய ஒரு நட்பு நாட்டின் (State Party) ஒத்துழைப்பைப் பெறுவதற்கான இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுக்கவும் இதுவே தருணமாகும்.

இத்தகைய சட்ட ரீதியான சர்வதேச நெருக்கடிகளைத் தமிழர் தரப்பு முறையாகக் கையாளத் தொடங்கினால், இலங்கை அரசு தனது நீண்டகாலக் கட்டமைப்புச் சிந்தனைகளில் இருந்து இறங்கி வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

இது இந்திய மற்றும் அமெரிக்க வல்லரசு நாடுகளின் கவனத்தை நேரடியாக ஈர்க்கும் என்பதுடன், இந்திய வெளியுறவு அமைச்சர் போன்ற உயர்மட்டத் தலைவர்கள் நேரடியாக தமிழர் பிரதேசத்துக்கு வந்து பேச்சுவார்த்தைகளை நடத்தும் சூழலை உருவாக்கும். இவ்வாறான ஒரு 'சர்வதேச பேரம் பேசும் சக்தியை' உருவாக்குவதற்கும், சர்வதேசச் சட்டங்கள் ஊடாக ஜனநாயக வழியில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் தயங்குவதன் பின்னணி என்ன?

தமிழ்த் தேசியக் கட்சி உறுப்பினர்கள் பலரும் மேடைகளில் 'இனப்படுகொலை' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், அதனை சர்வதேச நீதிமன்றத்தில் நிரூபிப்பதற்கான 'தடயவியல் சான்றுகளை' சேகரிப்பதற்கோ அல்லது சர்வதேச சட்ட வல்லுநர்களுடன் இணைந்து செயற்படுவதற்கோ ஒரு நிரந்தரமான பொறிமுறையை அவை இதுவரை உருவாக்கவில்லை. செம்மணி போன்ற இடங்களில் கிடைக்கும் ஆதாரங்களை அறிவியல் ரீதியாக ஆவணப்படுத்தத் தவறுவது இவர்களின் முதன்மையான பலவீனமாகும். ஒரு நட்பு நாட்டின் ஊடாக இலங்கையை சர்வதேச நீதிமன்றத்திற்கு இழுப்பதற்கான 'பின்வாசல் இராஜதந்திரத்தில்' (Backchannel Diplomacy) அவர்கள் ஈடுபடுவதில்லை. மாறாக, ஒவ்வொரு முறையும் ஐ.நா. மனித உரிமைச் சபையில் அறிக்கை சமர்ப்பிப்பதோடு மாத்திரம் தங்கள் பணியை நிறுத்திக் கொள்கின்றன.


அமெரிக்க - இந்திய அரசுகள், இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிட வேண்டுமெனில், 'சர்வதேச சட்ட நெருக்கடி' ஒன்று உருவாக வேண்டும். ஆகவே, செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளின் எச்சங்களை ஒரு 'சர்வதேசக் குற்றமாக' முன்னிறுத்தி, கவனத்தை ஈர்க்கும் விதமான ஜனநாயகப் போராட்டங்கள், இராஜதந்திர முன்னெடுப்புகள் ஆகிவற்றில் ஈடுபட்டால், சர்வதேச இராஜதந்திரிகள் பலாலி சர்வதேச விமான நிலையத்திற்கு நேரடியாக வந்து இறங்கும் சூழலை உருவாக்காலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணராஜா சஞ்ஜீவன்
அச்சுவேலி

# அது எங்கட காணி

சஞ்சீவி சிறுகதை




வீட்டின் மூலையை அண்டியிருந்த சாய்மனைக் கதிரையின் கைப்பிடிகள் இரண்டிலும் தன் இரண்டு கால்களையும் தூக்கிப்போட்டவாறு அன்றைய நாள் விடயங்களை அறியப் பேஸ்புக்கை நோட்டமிட ஆயத்தமானான் கரன். வெக்கையால் அவன் உடல் முழுவதும் வியர்வைத்துளிககள் குளித்த பின் உலர்த்தாமல் வந்ததுபோலக் காட்சியளித்தது. கால்களை ஆட்டியவாறு அவன் தொலைபேசியைப் பார்த்துக்கொண்டிருக்க நான் அன்றைய ஞாயிற்றுக் கிழமை நாளிதழ்களை நோட்டமிட்டவாறாக இருக்கிறேன். திடீரென அவன் முகத்தில் ஒரு மாற்றம்

"என்ன மச்சான்? திடீரென முகம் எல்லாம் மாறிட்டுது. ஏதும் பிரச்சினையோ?"

"ஓமடா மச்சான்! இவை இங்க நிலத்தை விடுறதுக்கு முயற்சி நடக்குது என்று சொல்லிக்கொண்டிருக்கினம். இங்க என்னன்டால் அது இடியப்பச்சிக்கல் போலக் கிடக்குது!"

சின்ன விசயம் சிக்கினாலே பெரிசுபடுத்துவான். இன்றைக்கென்னமோ பெரிய விசயம் ஒன்று அவன் பார்வையில் மாட்டியிருக்கின்றது என்றது மட்டும் அவனின் பதகளிப்பு மூலமாக நான் அறிந்துவிட்டேன். அடுத்த கட்டம் தன் அஸ்திரத்தைத் தன் தந்தையை நோக்கித் தொடுக்கிறான்.

"அப்பா!... அப்பா!.... தையிட்டியிலே பேந்தும் ஏதோ சிக்கல் நடந்திருக்குது போலக் கிடக்குது!"

" என்னவாம்! கொஞ்சம் எனக்கும் காட்டன் பார்ப்பம்!"

பார்த்துக்கொண்டிருந்த ராஜன் அண்ணையின் முகமும் லேசாக சிவக்கிறது.

"இன்னும் என்னென்ன எல்லாம் செய்யப்போறாங்களோ?, அடுத்தவன் காணிக்குள்ள இருந்துகொண்டு ஆயிரத்தெட்டுக்கூத்துகள் நடத்துகினம்!, நாளைக்கு விடுவம் நாளையின்டைக்கு விடுவம் என்று கதையளப்புத்தான் என்றால் இப்ப இந்தக் கூத்துகளும் வேற..."

அன்றைக்கு ராஜன் அண்ணை இருந்த கோபத்துக்குக் கோயில் முன்றலில் உடைக்கிற சிதறு தேங்காய் போல தொலைபேசியும் உடைந்திருக்கும் அந்தத் தொலைபேசி தப்பியது அன்று அது செய்த பாக்கியம்.

கரனுக்கு முகத்தில் ஈயாடவில்லை. உண்மையில் கரனின் தந்தை( ராஜன் அண்ணை என்று தான் நான் கூப்பிறனான்) நல்ல மனிசன் . குடும்பம் மீதான அக்கறை அதிகமாகக் கொண்ட குடும்பத்தலைவன் தான், சமூக விடயங்கள் மட்டுமன்றி தமிழ்த்தேசியம் என்ற தார்மிகக் கோட்பாடுகளாலும் பின்னிப்பிணைக்கப்பட்ட ஆள் தான்.

சின்ன வேலித்தகராறுகளுக்கே நீதிமன்றம் ஏறி வழக்காடிட்டு வாற கால கட்டத்தில் தான் சிறுவயதிலிருந்தே பிறந்து வளர்ந்த காணியில் இன்னொருத்தர் ராஜாங்கம் பண்ணினால் "இராமன் ஆண்டாலும், இராவணன் ஆண்டாலும் எனக்கொரு கவலையில்லை....." என்று பாட்டுப் பாடிக் கொண்டு இருக்கவோ மனது வரும்? நியாயமான கோபம் தான். ராஜன் அண்ணையின் சொந்த இடம் காங்கேசன் துறையில் தையிட்டி தான். இன்றைக்கு எனக்கும், கரனுக்கும் இருபத்தைந்து வயசு அண்மித்தாயிற்று. திருமணம் முடித்து முப்பத்தொரு வருசமாகுது. ஏறத்தாழ முப்பத்தைந்து வருசத்துக்கு மேற்பட்ட கால ஏக்கமது. "என்ன செய்ய இனித் தமிழனை கடவுள் தான் காப்பாத்த வேணும் எண்டு தந்தை செல்வநாயகம் சொன்ன மாதிரி இனி ஒரு கடவுள் தான் இறங்கி வரவேணும்!"

குசினியின் பக்கமாக வந்த இந்தக் குரல் சாந்தமாகவும் சற்றே கவலையுடனான தொனியுடனும் வெளிப்பட கரனின் தாயார் சுதமதி அக்காவும் அங்கு வந்து சேருகின்றார். "கடவுள் பெயரில தானே இங்க எல்லாம் நடக்குது! அப்ப வராத கடவுள் அப்ப வந்து இனி வந்து என்ன தரப்போறார்?"

"அப்பிடிக் கதைக்காதையுங்கோ அப்பா! மேலயிருக்கிறவன் தீர்ப்பும் தப்பாது சரியான நேரத்தில் கிடைக்கும்!"

"இப்ப வேதாந்தம் பேசவோ இங்க வந்தனீ?"

முள்ளிவாய்க்கால் சண்டைக்கட்டத்தோட கடவுள் என்ற பேச்சைத் தொட்டாலே பிரச்சினை வரும் என்று கரன் எனக்கொரு தடவை கூறியிருந்தான். இன்றைக்குத் தான் கண்ணால பார்க்கிறன்.

என்னுடைய பக்கமாக ராஜன் அண்ணையின் பார்வை திரும்புகிறது. எதுவுமே நான் கதைக்காமல் அவரை நோட்டமிடுகிறேன். அவர் பார்வையில் உள்ள தவிப்பும் ஏக்கமும் மிகக் கனதி மிக்கனவாகக் காணப்பட்டிருந்தன.

"எங்கட காணி உந்த றெயில்வே ஸ்ரேசனுக்குப் பக்கத்த தான் இருக்குது! நிறைய தரம் போய் ஆமிக்காரங்களிட்ட எல்லாம் கதைச்சு ஆதாரம் காட்டியாச்சு! கரனுக்கு அடிக்கடி அவனை அந்தப் பக்கத்தால கூட்டிக்கொண்டு போகேக்குள்ள சொல்லுறனான் நான் செத்தா என்ர உடல் இங்க தான் எரியவேணும் எண்டு!"

இத்தோடு நின்று விடவில்லை மீளவும்.....

"உந்தக் காணி வளவு எல்லாம் இவங்களிட்ட குடுத்திட்டு திரும்பவும் உவையிட்டப் போய் கெஞ்சிக் கூத்தாட வேணும் எண்டு நாங்கள் என்ன கனவோ கண்டனாங்கள்! காலம் எங்க கொண்டு வந்திட்டு பாத்திங்களோ?"

இதற்கென்ன பதில் கூற எண்டு விழி பிதுங்கியவனாக நிற்கின்றேன். விடை இருக்கிறது என்றால் பதில் தரலாம். பதில் வராத கேள்விகளுக்கு விடை அளிப்பது மிகச் சிரமமான கரியம் தானே?. ராஜன் அண்ணையும் மனைவியும் எதுவும் கதைக்கவில்லை. இரண்டு நிமிசம் நிசப்தமாக இருந்த பின் கவிக்கால மேகம் போல் திடீரென ஒரு கவிதையைச் சொன்னான். பாடப் புத்தகங்களிலோ, பாரதியார், பாரதிதாசன் எனப் புரட்சிக் கவிகளின் வரிகளில் இல்லாத வீச்சு அக்கவிதையின் மூச்சாக அமைந்திருந்தது.

"அன்னை மடியில் இருந்து கீழ் இறங்கி
அடுத்த அடியை நீ வைத்தது
தாயகத்தின் நெஞ்சில் தானே
இறுதியில் புதைந்தோ
அல்லது எரிந்தோ எருவாவதும்
தாய் நிலத்தின் மடியில் தானே
நிலமிழந்து போனால் பலமிழந்து போகும்
பலமிழந்து போனால் இனமழிந்து போகும்
ஆதலால் மானுடனே
தாய் நிலத்தைக் காதலிக்கக் கற்றுக்கொள்!"

கன்னி மேல் ஏற்படும் பருவக்காதலை விட பன்மடங்கு மகத்துவமானது தன் நிலத்தைத் தான் காதலிப்பது. மிடுக்குடன் அக்கவிதையைச் சொன்ன மாத்திரம் அக்கவிதையின் கவிக்கர்த்தாவையும் ஞாபகப்படுத்தினர். ஒரு நொடியில் ஓராயிரம் காட்சிகளைக் கண்முன்னே தன் கதைத்திறத்தால் கொண்டுவரும் ஞான வித்தை எப்படித் தான் ராஜன் அண்ணைக்குச் சாத்தியம் ஆயிற்று? என்பது புரியாத புதிர் தான். துரோணரை மானசீகக்குருவாகக் கொண்டு ஏகலைவன் தனுஷ் வித்தையை கற்றது போல் இவரும் இந்த வித்தையை யாரிடம் கற்றாரோ யான் அறியேன்?.

"ஏற்கனவே குருந்தூர், கேப்பாப்பிலவு, புல்மோட்டை, வெடுக்குநாறி மலை என்று எல்லாம் தொல்பொருள் பெயரைச் சொல்லிப் பறிச்சாச்சு! எங்கட காணியும் நாங்களும் இல்லாத காலத்தில் அப்படித்தான் போகப் போகுதோ தெரியவில்லை."

அவரது வாய் இன்னும் ஓய்ந்த பாடில்லை இந்த மாதிரியான சூழ்நிலையில் தானே சில விடயங்களை சின்ன பெடியளான நாங்களும் அறிந்து கொள்ளலாம் என்றதால நானும் ஒன்றும் பேசாமல் கதை சொல்லியைப் பாத்துக்கொண்டிருக்கின்றேன். கதிரையை விட்டு எழும்பு வேலியின் அருகில் இருந்த பூவரசம் தடியின் சிறுபகுதியை கைகளால் ஒடித்து நிலத்தில் எல்லோரின் பார்வையும் படத்தக்கவாறு ஏதோ கீறுகிறார்.

"இந்த முன் காணி தான் எங்கட இங்கால அக்காவுக்கு (தன்னுடைய இறந்துபோன தமக்கைக்கும்) அதுக்குப் பின்னால வாற பகுதியில ஒன்று பெரியப்பாவுக்கு (கரனின் பெரிய தந்தையார்க்கு) மற்றது எனக்கு அது உண்மையில் சின்னம்மாவின் காணி. சின்னவயசில இருந்தே கிழவிக்கு நான் எல்லாம் செய்து கொடுக்கிறதால என்மேல இருக்கிற பாசத்தில அதை எனக்கே எழுதிப் போட்டு அவவும் போட்டா!"

எனக்கு என்னமோ ராஜன் அண்ணையை நாங்கள் பேட்டி எடுக்கிற மாதிரி இருந்தது. நேரமோ பதினொன்று அரையைத் தாண்டியிருந்தது எனக்கோ வந்த நித்திரை பறந்தோடிவிட்டது. ஆவலுடன் அவரின் பழைய நினைவுகளையும் கேட்கிறேன். "சந்நிதியான் திருவிழா நேரத்தில் காவடிகளோடு நடந்து வந்து கும்பிட்டு போறனாங்கள். சில நேரம் தங்கியிருந்து திருவிழாப் பார்த்த நாள்களும் உண்டு. மாவையில் தெப்பத்திருவிழா என்றால் களை கட்டும். போன வருசம் போய் கோயில்ல நிக்கும்போது அந்தக்கால நினைவுகள் எல்லாம் கண்முன்னே வந்து போகத் தவறவில்லை."

கடவுள் பேச்சையே மறுத்தவர் ஆயினும் கந்தன் எண்டு வந்தால் கலங்கடித்தானே செய்யும். இதுவும் அப்படித் தான் புதுசா அப்பத்தான் வீடு கட்டியிருந்தவை. இண்டைக்கு மூண்டு வருசம் ஆகிவிட்டது. அதிலும் கடன் அதிகம். கரன் என்னுடைய அயலவன், நண்பன் என்ற காரணத்தாலே அந்தக் குடும்பத்தில் நானும் பெறாத பிள்ளையாகிப்போனேன். எதையும் மறைக்கிறது இல்லை.

"காணியை விட்டால் அதில் ஒரு சிறு பகுதியை விற்றால் ஆவது கடனை முடிக்கலாம் என்றால் போற போக்குக்கு காணியின் சிறு துண்டாவது மிஞ்சுமோ என்றதே தெரியாமல் கிடக்குது!" இப்ப தான் பெருமூச்சோடு அவரின் நிலை சற்று சாந்தமாகிறது. நேரம் ஒரு மணியைத் தாண்டிவிட்டது விடிய வேலைக்குப் போகவேணும் ஆனால் இவையின் இருள் நிறைந்த அவலங்களுக்கு விடிவு எப்ப கிடைக்கும்? என்று மனமும் எண்ணிக்கொண்டுதான் இருக்க அந்தக் கேள்வியோட நானும் என்ர வீட்டை நோக்கி விரைகிறேன். குண்டுகளும் இரத்தங்களும் பரவிய இடத்தில் தானும் கிடந்திருந்தால் இந்த வேதனை தனக்கும் வந்திராது என்று ராஜன் அண்ணை கூறியது கண்ணீரையே வரவழைத்துவிட்டது. இன்னும் ஒரு படி யோசித்தால் உண்மையில் கடவுள் இருக்கிறாரோ? என்ற கேள்வி எனக்குள்ளும் துளிர்த்து விடும் என்றவாறே கந்தனை நினைத்தவாறே மெல்லக் கண்களை மூடத் தொடங்குகிறேன். நித்திரை வருவதுகூட எனக்கு இப்போது கேள்விக்குறியே! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மதிப்புக்குரிய உள்ளூராட்சிசபை முதல்வர்கள் அனைவருக்கும்

அவசரமா ஒரு கடுதாசி

வணக்கம்.

வந்த புதுதில் வடிவாக வெளுத்து வாங்கினீர்கள். உங்கடை வித்துவத் தன்மை எல்லாத்தையும் காட்டி மக்களுடைய உள்ளங் கவர் கள்ளராக மாற எத்தனித்தீர்கள். அதுக்காகப் பல திட்டங் களைச் செய்யப்போகிறோம். அதுதொடர்பாக அதிரடி நடவடிக்கைகளைச் செய்து காட்டப்போகிறோம் என்று புறப்பட்டுச் சிலதைச் செய்தும் காட்டினீர்கள்.

றோட்டுகளைப் போட்டீர்கள். குப்பைகளை அள்ளினீர்கள். மின்விளக்குகளைப் போட்டீர்கள். மக்கள் உங்களைப் புழுகினார்கள். சிலர் புதிய துடைப்பங்கட்டை நன்றாகக் கூட்டும் என்று நையாண்டியும் பண்ணினார்கள். நான் அதைக் காதில் விழுத்தாது உங்களுக்கு ஆதரவாகக் கதைத்தேன். ஆனால் என்னை ஏமாற்றும் படியாகச் சிலபல நடவடிக்கைகள் நடந்துவிட்டன.

உணவுக் கடைகளில் பொலித்தீனை ஒழித்துக் கட்டுவதாகச் சொல்லிக் கால அவகாசத்தையும் கொடுத்தீர்கள். வாழை இலைகளில் சாப்பிடுவது நல்லது என்றும் சொன்னீர்கள். பல உணவுச் சாலை முதலாளிகள் பயந்தனர். பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த எல்லா முயற்சிகளையும் எடுத்தனர். வாழை இலையிலேயே உணவைப் பரிமாறினார்கள். ஆனால் ஓரிரு நாட்களில் திட்டம் பிசு பிசுத்துப் போய்விட்டதாகவே சொல்லலாம். அதுவும் ஒரு அரசியல் என்ற செய்தி மெல்லக் கசிந்தது. உணவக உரிமையாளர்கள் குதூகலித்தனர். மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது. வடக்கு மீண்டும் பொலித்தீன் மயமாகி விட்டது. மீண்டும் எல்லாக் கடைகளிலும் லஞ்ச் சீற் தாண்டவமாடுகிறது.

கொத்துறொட்டிக் கடைகளில் விரித்து வைத்த லஞ்ச் சீற்றில் சுடச் சுடக் கொத்து றொட்டியைப் போட அது சூட்டில் சுருங்குவதைப் பார்க்கலாம். பொலித்தீனில் சூடான உணவைப் போடும் போது அதில் இருந்து வரும் ஒரு நச்சு வேதிப்பொருள் கான்சரை ஏற்படுத்துமாம்.

அடுத்தது தெருக்கரையோர உணவு வண்டிகளை ஒழுங்குபடுத்துவது என்று சொன்னீர்கள். மாலை வேளைகளில் தொடங்கும் அது போன்ற கடைகள் சட்டவிரோதம் என்று தெரிந்தும் நீங்கள் வாய் பேசாது அமைதியாகப் பார்த்துவிட்டுப் போய்விடுவீர்கள். வெள்ளி மாலை தொட்டு ஞாயிறு இரவுவரை அவர்கள் கூத்தாட்டம் தான்.

பழைய இரும்பு மற்றும் பாவித்த பொருட்களை வாங்க வரும் ஐந்துசந்தி வியாபாரிகளைக் கட்டுப்படுத்தப் போவதாக அறிவித்தீர்கள். அவர்கள் அஞ்சினார்கள். வருவதை நிறுத்தினார்கள். அதுவும் பிசு பிசுத்துப் போன திட்டமாகிப்போக மீண்டும் நாங்கள் வருகிறோம் என அவர்கள் பாட்டைப்போட்டுக் கொண்டு வீதிவலம் வருகிறார்கள். பல திருட்டுகளுக்குக் காரணம் அவர்கள் என்றால் நம்புவீர்களா?

அடுத்ததாகப் பாண் வண்டிப் பரிசோதனை. சடுதியாக அவைகளை நிறுத்திச் சோதித்துப் படங்கள் எடுத்துப் பேஸ்புக், ரிக்றொக் என எல்லா இடங்களிலும் பதிவேற்றிப் பேரெடுத்தீர்கள். அதுவும் ஓரிரண்டு நாட்களில் பிசுபிசுத்துப் போய்விட்டது.

உங்கள் பிரதேச சபைப் பிரிவில் வெள்ளி மாலை வேளைகளில் விரிக்கப்படும் கடைகள் ஞாயிறு மாலை வரை நடைபெறும். பெரும்பாலும் தென்னிலங்கை வியாபாரிகளே அப்படி வியாபாரத்தில் ஈடுபடுகிறார்கள். பெரும்பாலும் அவர்கள் தரமான பொருட்களை விற்பதில்லை. அவர்களுக்குத் தெரியும் விடுமுறை நாட்களில் உங்கள் அதிகாரிகள் ஓய்வெடுப்பார்கள் என்று. அதற்கேற்றாப் போல நடவடிக்கைகளை அவர்கள் திட்டமிடுவார்கள். அதனைக் கட்டுப்படுத்த உங்கள் வருவாய்த்துறை அதிகாரிகளை ஒரு சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுத்தலாம். இது போன்ற மக்கள் சேவைக்கு ஓய்வு நாள் கிடையாது என்பது எனது கருத்து.

அடுத்ததாக விலைக் கட்டுப்பாடும் பேணப்படுவதில்லை. தரம் பார்ப்பதுவும் இல்லை. முன்பு எம்மிடமிருந்த தரம் பார்த்துப் பொருட்களை வாங்குவது என்ற பண்பாடு மறைந்து பல விருடங்கள் போய்விட்டது.

அடுத்ததாக விற்பனை நிலையங்களுக்குக் கொடுக்கப்படும் அனுமதிப் பத்திரம். காலாவதியான அனுமதிப் பத்திரத்தை வைத்துக் கொண்டு காலத்தை ஓட்டுகின்ற பெருமக்களும் கூட்டத்தில் இருக்கிறார்கள். அவர்கள் 'சம்திங்' கொடுத்துத்தான் பொழுதைப் போக்குவதாக மக்கள் பேசிக் கொள்கின்றனர். ஒரு அதிகாரி அவர் கடமையைச் சரிவரச் செய்யாது போனால் மக்கள் அப்படித்தான் யோசிப்பார்கள். அது அவர்கள் தப்பு இல்லை.

ஒரு உதாரணத்துக்கு உங்கள் பகுதிகளில் திடீர் திடீர் என முளைக்கும் தண்ணீர் விற்பனை நிலையங்களைச் சொல்லலாம். அத்துடன் பறவைகள், வளர்ப்பு மீன்கள் போன்றவைகளை விற்கும் கடைகள், அவர்கள் நீங்கள் கொடுக்கும் வியாபார அனுமதிப் பத்திரத்தை வைத்துக் கொண்டு காலத்தை ஓட்டுவதாகச் சொல்லப்படுகிறது.

உங்கள் வியாபார அனுமதிக்கு அப்பால் அவர்கள் அது தொடர்பான பல அனுமதிகளைப் பெற வேண்டுமாம். அத்துடன் இடம் விட்டு இடம் கொண்டு போய்த் தண்ணீர் வியாபாரம் செய்வதற்கு வேறு சில அனுமதிகளும் எடுக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் பெரும்பாலும் நடைமுறைகளை மதிக்காமலே தொழில் செய்கிறார்கள் என்று பேசிக் கொள்ளுகின்றனர்.

இப்படிக்கு
அப்பாவி அன்னமுத்து



பதறவைக்கும் பரபர தொடர்

# நிழல் உலகச் சிலந்தி

○ வேவுக்காரன்

ஜெப்ரி எப்ஸ்டீனின் மென்ஹற்றன் மாளிகை என்பது வெறும் ஒரு சொகுசு பங்களா அல்ல; அது ஒரு 'குற்றச் சாம்ராஜ்யத்தின் தலைமையகம்' என்பதை 2019 இல் நடந்த எப்.பி.ஐ. (FBI) சோதனை உலகிற்கு நிரூபித்தது. 71வது வீதியில் அமைந்திருந்த அந்த மாபெரும் மாளிகையின் ஒவ்வொரு சுவருக்குப் பின்னாலும் ஒரு ரகசியம் ஒளிந்திருந்தது.

எப்ஸ்டீனின் படுக்கையறையை ஒட்டி இருந்த ஒரு பிரமாண்டமான பாதுகாப்புப் பெட்டகத்தைத் திறந்தபோது அதிகாரிகள் திகைத்துப் போயினர். அதில் பல மில்லியன் டொலர் மதிப்புள்ள தளர்வான வைரங்கள் அடுக்கப்பட்டிருந்தன. கோடிக்கணக்கான டொலர் கட்டுக்கட்டாக இருந்தது.

சவூதி அரேபியா வழங்கியது போன்ற ஒரு பாஸ்போர்ட் கண்டெடுக்கப்பட்டது. அதில் எப்ஸ்டீனின் புகைப்படம் இருந்தது. ஆனால் பெயர் வேறாக இருந்தது. அவர் எந்நேரமும் நாட்டை விட்டுத் தப்பிக்கத் தயாராக இருந்ததை இது காட்டியது.

11

'இளம் பெண்களின் பெயர்கள்' மற்றும் 'முக்கியமான நபர்களின் பெயர்கள்' எழுதப்பட்ட சீடிக்கள் கண்டெடுக்கப்பட்டன. அல் அந்தரங்க வீடியோக்கள் மற்றும் பிளாக் மெயில் செய்யப் பயன்படும் காட்சிகள் இருந்தன. எப்ஸ்டீனின் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் பதிவு செய்யப்பட்ட பல ஆண்டு காலத் தரவுகள் இதில் சேமிக்கப்பட்டிருந்தன.

அந்த மாளிகையின் உள் அலங்காரமே எப்ஸ்டீனின் விகாரமான மன நிலையை வெளிப்படுத்தியது.

அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்டன், பெண்களின் நீல நிற ஆடையை அணிந்து, ஒரு நாற்காலியில் அமர்ந்திருப்பது போன்ற ஒரு பெரிய ஓவியம் வரவேற்பறையில் இருந்தது. இது அதிகார வர்க்கத்தை எப்ஸ்டீன் எப்படிக் கிண்டல் செய்தார் என்பதைக் காட்டியது. பல இடங்களில் விசித்திரமான மற்றும் அச்சமூட்டும் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. மாளிகையின் சுவர்களில் செல்வாக்கு மிக்க உலகத் தலைவர்கள் மற்றும் பிரபலங்களுடன் எப்ஸ்டீன் மற்றும் கிஸ்லேன் இருக்கும் நூற்றுக்கணக்கான புகைப்படங்கள் ஒரு 'சுவர் சித்திரமாகவே' உருவாக்கப்பட்டிருந்தது.

மாளிகையின் மேல் தளங்களில் பல 'மசாஜ் அறைகள்' இருந்தன. அந்த அறைகளில் மசாஜ் டேபிள்கள், எண்ணெய்கள் மற்றும் இளம் பெண்களுக்குப் பயிற்சியளிக்கப் பயன்படும் பொருள்கள் இருந்தன. சுவர்களில் பதிக்கப்பட்டிருந்த கேமராக்கள் அந்த அறைகளில் நடக்கும் அனைத்தையும் ரகசியமாகப் பதிவு செய்தன. எப்ஸ்டீனின் புகழ்பெற்ற 'லிட்டில் பிளாக் புக்' (Little Black Book) அங்குதான் இருந்தது. அதில், உலகெங்கிலும் உள்ள சுமார் 2,000க்கும் மேற்பட்ட வி.ஐ.பி.க்களின் நேரடித் தொலைபேசி எண்கள், மின்னஞ்சல்கள் மற்றும் முகவரிகள் இருந்தன. யாருக்கு எப்போது 'வசதிகள்' செய்து கொடுக்கப்பட்டன என்பது பற்றிய ரகசியக் குறிப்புகளும் அதில் காணப்பட்டன.

இந்தச் சோதனையின் போது கிடைத்த ஆதாரங்கள் தான், எப்ஸ்டீன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தின.


(ரகசியங்கள் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சஞ்சீவி
10 மே 2026

# வரலட்சுமி

போரின்
கவிதை



எங்கள் அண்ணா....
வியர்வையைத் தெளித்து
எம் குடும்பத்தை
விருட்சமாக்கியவன்.
பகலின் பசியையும்
இரவின் உறக்கத்தையும்
தொலைத்து......
பெற்றோரையும் சேர்த்து
அடைகாத்தவன்.

கடின உழைப்பில்
எங்கள் கனவுகளுக்கு
உயிர் கொடுத்தவன்...
மூத்தவன் என்னும் உறவில்
அப்பாவின் தியாகத்தையும்
அம்மாவின் பரிவையும்
தன் அன்பால் ஊட்டிய எம்
குடும்பத்தின் ஆணிவேர்.

தங்கைகளின் கழுத்தில்
மாங்கல்யம் ஏறுவதற்காக...
தன் இளமைக் கனவுகளை
காலத்தின் பரணில்
தூக்கிப் போட்டவன்.

பட்டு புடைவைகள் வாங்க
தன் ஆசைகளை
நைந்த துணியாக
மடித்து மறைத்தவன்.
ஆசைகள் அத்தனையையும்
புன்னகையோடு தியாகம் செய்தவன்.
எங்கள் கைகளில் மருதாணி சிவக்க...
தன் உள்ளங்கைகளில்
உழைப்பின் தழும்புகளை
மட்டுமே சுமந்து நின்றவன்.
தரைமட்டமான தன் கனவுகளின் மீதே
திருமண மேடையை அமைத்து...
தன் நரை விழுந்த இளமையை எண்ணி
மறுகாமல் எங்கள் வாழ்வு
மலர்ந்ததைப் பார்த்து
மகிழ்ந்து இரசித்தவன்.

எங்கள் பிள்ளைகளை
தன் நெஞ்சோடு அணைத்து
பாசம் பகிர்ந்தவன்...
உறவுப் பெயர்களுக்கு
தந்தையாக வாழ்ந்தவன்.
தனக்கென வாரிசு இன்றி...
எங்கள் குழந்தைகளையே
தன் உலகமாகவும்
உயிராகவும் நினைத்தவன்.
அவன் தோள் ஏறிப் பார்த்து
எங்கள் பிள்ளைகளுக்கு
இந்த உலகம் இன்னும்
அழகாய் தெரிந்தது.
விளையாட்டுக் காட்டி...
நிலாச்சோறூட்டி....
தாய்மையின் மென்மையையும்
தந்தையின் அரணையும்
ஊட்டியவன்.

தம்பி களம் புகுந்த போது...
இதயம் துடித்த துடிப்பிலும்,
சிந்திய கண்ணீரிலும்
அவன் பாசத்தை அறிந்தோம்..
ஊர் ஊராக, தேடி அலைந்து...
வேலையையும் உதறி
திசை தெரியாமல் சுற்றியவன்.
தேடித் தொலைத்த நாள்களில்

கழுத்தை நெரித்த
கடன்களை அடைக்க...
பகல் நேர உழைப்பு போதாதென்று,
தூங்கும் உலகுக்கு நடுவே
இரவிலும் கண்விழித்துக்
காவல் நின்றான்.
அவனுக்காகவே மலர்ந்த காதலை...
அவன் கரம் பிடிக்கக்
காத்திருந்தவளை...

எம் குடும்பத்தின் வறுமையையும்
சுமைகளையும் காட்டி
கண்ணீரோடு அனுப்பினான்.
சேர்க்க நாம் அலைந்த போது
அவள் கண்கள்
இவனை மட்டுமே தேடிய போதும்...
தன்னவளின் கண்ணீரை விட...
எம் எதிர்காலமே பெரிதென்று,
தன் காதல், திருமணம்,
தனிப்பட்ட வாழ்வு

அத்தனையையும் வெறுத்த
முனிவன் அவன்.

அடுப்படியில் அன்னையானான்...
வியர்வை சிந்திச் சமைத்து,
தன் கைகளால் சோறூட்டி .....
எங்கள் பசிபோக பசித்திருந்தவன்
அம்மாவின் சுமைக்கு தோள் கொடுத்து,
தங்கைகளின் மானம் காக்க...
அன்பெனும் கோட்டைகட்டி,
கண்ணிமை போல் காவல் நின்றவன்.

உளியாகத் தன்னைத் தேய்த்துக்கொண்டு...
எம் ஒவ்வொருவர் வாழ்வையும்
அழகான சிலையாகச்
செதுக்கி உயர்த்தியவன்.
எங்கள் வசந்தங்களை எல்லாம்
உருவாக்கிவிட்டு, அவன் கண்கள்
வாசலையே பார்த்திருந்தன...
களம் புகுந்த தன் தம்பி
உயிரோடு மீண்டு வருவானென
நம்பிக்கையில் காத்திருந்தான்.
தன் உள்ளங்கைகளில் ஏந்தி...
தன் உதிரத்தில் வளர்ந்த தம்பியை,
சொந்தக் குழந்தையாக
வளர்த்த நாள்களை
எண்ணி வருந்தினான்....
அவன் பிஞ்சு விரல் பிடித்த நினைவுகளும்,
மார்போடு சாய்ந்துறங்கிய இரவுகளும்
கண்முன்னே நிழலாட...
தனிமையின் இருளில்
நெஞ்சடைத்து அழுதான்.

போர்க்களத்துத் துப்பாக்கிச்
சத்தங்களுக்கு நடுவே
என் பூஞ்செடி பாடுபடுகிறதோ
என நினைத்து நினைத்து
உடைந்த இதயத்தோடு
ஊமையாக அழுது முடித்தான்.

போரின் இடம்பெயர்வு...
எங்களையும் வதைத்து,
எங்களைத் தாங்கிய
அவனையும் சீரழித்தது.
தங்க இடமின்றி
துன்பத்தில் தாங்கிப் பிடிக்க
நாதியுமின்றி
நடுத்தெருவில் நின்றோம்...
தெரிந்தவர், அறிந்தவர் வீடுகளின்
கோடிப்புறங்களிலும்
தாழ்வாரங்களிலும்
எங்களை ஒதுங்க வைத்து...
எங்கள் உயிர்களைக் காப்பாற்றினான்.
இருண்ட மேகங்கள் விலகிய போது,
சிதறிப் போன எங்களைச்
சிறகுகளுக்குள் பொதிந்து,
பத்திரமாக மீண்டும்
எங்கள் சொந்த வீட்டின் வாசலில்
கொண்டு வந்து சேர்த்தான்.

பகலிரவாகத் தன் இரத்தத்தை
வியர்வையாக மாற்றி
தான் சேகரித்தவற்றை செலவழித்த
அன்பு ஊதாரி அண்ணன்.
எங்கள் வாழ்வை
வசந்தமாக்கிவிட்டு,
தன் வாழ்க்கையை
வெறுமையாக்கிக் கொண்ட...
எங்கள் குலசாமியை

காலத்தின் சதியில்
நாங்கள் தொலைத்து நின்ற
அந்தக் கண்ணீர்க் கதை...
இந்த உலகிற்குத் தெரியுமா?

அந்தப் பாழடைந்த பொழுது...
எங்கள் அண்ணனை
களவு கொண்டது.
தன் ஆயுள் முழுதும் எங்களுக்காகவே
உருகி எரிந்த அந்த மெழுகுவர்த்தி...
தன் ஒளியை எல்லாம்
எங்களுக்குத் தந்துவிட்டு,
இறுதியில் இருளோடு இருளாகக்
காற்றில் கரைந்து போனதே.
அவனை இழந்து நின்ற
அந்த மரண வலியின் நொடியில்தான்
முழுமையாய் உணர்ந்தோம்...
இத்தனை காலம் நாங்கள் வாழ்ந்தது
அவனின் ஈடு இணையற்ற
தியாகத்தில் என்று

தன் வாழ்வையே காணிக்கையாக்கி
எங்களை வாழவைத்த
எங்கள் தெய்வத்தை...
அந்த இரக்கமற்ற காலத்தின் பொழுது
எங்களிடமிருந்து
நிரந்தரமாகப் பறித்து,
அனாதைகளாக ஆக்கியது.
அப்பாவின் நோயைத் தீர்க்க
பேருந்தில் புறப்பட்ட
அந்த நீண்ட பயணம்...
அண்ணனைப் பிரிக்கும் என்பதை
நாங்கள் அறியவில்லை.

இறங்கி, இறங்கி...
எங்கள் உயிர் பிழைத்திருப்பதை
இராணுவத்திடம்
அடையாள அட்டையாகக்
காட்டிச் செல்லும்
அந்தக் கொடிய காலம்...
எங்கள் ஒட்டுமொத்த
அடையாளத்தையே பறிக்கப் போகிறது
என்று அறியாமல் போனோம்.

வழமையான சோதனைச் சாவடி...
அன்று அண்ணனை மட்டும்
வித்தியாசமாக வளைத்தது.
விசாரிக்க வேண்டும் என்ற
அந்த அதிகாரக் குரல்,
காலத்தாலுமே உடைக்க முடியாத
இரும்புத் திரையை இழுத்து மூடியது.
சாதாரண விசாரணைதானே
என்று நம்பிக் கடந்து வந்த
அந்தச் சபித்த நொடி...
என் அண்ணனை...
எங்கள் குடும்பத்தின் ஆணிவேரை
அப்படியே அரக்கத்தனமாக
விழுங்கிக் கொண்டது.
எத்தனை முகாம்கள்...
எத்தனை வீதிகள்...
தேடித் தேடி
எங்கள் கால்கள் தேய்ந்தன.
கதறித் துடித்து
எங்கள் குடும்பத்தின் கண்ணீர்
வறண்டது... ...
அப்படி ஒருவனை அழைக்கவே இல்லை
எங்களுக்குத் தெரியவே தெரியாது
என்று எளிதாக உதிர்ந்த
அதிகாரத்தின் பொய்களுக்கு முன்னே...
எங்களை எல்லாம் வாழ வைத்த
அந்தத் தியாக தீபம்...
இருளில் அணைக்கப்பட்டது.

63

சுவாமிப் படங்களைத் எறிந்துவிட்டோம்
எங்கள் நெஞ்சங்களிலும் தெய்வமாக
வீற்றிருப்பது.....
எங்கள் அண்ணனின்
உருவப்படம் மட்டுமே.
எந்தத் துரோகமும் துவேசமும்
அறியாத வெள்ளை உள்ளம்...
களம் புகுந்த தன்
போராளித் தம்பியின்
நிழற்படத்தை, நினைவுகளாகத்
தன் நெஞ்சோடு பத்திரமாகத்
தன் சட்டைப் பையிலுமாகச்
சுமந்து திரிந்த...
ஒரு தாயுமானவனின் கதை இது.

தம்பியின் மீதான அந்தப் பாசமே
அவனைக் காவுவாங்கும் ஆதாரமாக
மாறுமென்று அறியாமல்...
அதிகாரத்தின் பசிக்கு
இரையாகித் தொலைக்கப்பட்ட
எங்கள் குலதெய்வம் அவன்.

இந்த வலியின் ஆழம்
உயிரைக் கிழித்துக் குருதி கொட்டும்
இந்த ஆறாத ரணம்...
பாதிப்பைச் சுமந்து திரியும்
எமக்கு மட்டுமே புரியும்.

யுகங்கள் பல கடந்தாலும்...
எங்கள் ஊனுக்கும் உயிருக்கும்
என்றும் ஒரே கடவுள்...
எங்களிடமிருந்து பறிக்கப்பட்ட
அண்ணன் மட்டுமே.....
அவனது தியாகமும் எங்கள் கண்ணீரும்
காலத்தால் என்றும்
அழிக்க முடியாத கல்வெட்டுகள்.
செம்மணி தோண்டப்படும் போது
எங்கள் தொண்டையில்
பருக்கைச் சோறும் இறங்காது.
பசியை மறந்து......
அவன் படத்துக்கு முன்னே
உறைந்துபோய் கண்ணீரை மட்டுமே
குடித்துப் பிழைப்போம்.
நீ பையில் வைத்திருந்த
சில்லறைக் காசுகளோ...
உன் கடிகாரமோ...
கோரமான குழிக்குள் இருந்து
அகப்பட்டுவிடக் கூடாது.

எங்காவது ஓரிடத்தில்
என் அண்ணன்
இன்னும் உயிருடன் இருப்பான்...
ஒருநாள் திரும்பி வந்து
எம் வாசலில் சிரித்தபடி நிற்பான்.
மகன் வருவான்... என காத்திருந்த பெற்றோர்
கண்களை மூடிவிட்டார்கள்...
அவர்கள் விட்டுச் சென்ற
பெருமூச்சோடும் கண்ணீரோடும்
நாங்கள் மட்டும் அனாதைகளாக
காத்துக் கிடக்கிறோம்.

காலம் கொடிய மாற்றங்களை
கொண்டு வந்து போடுகிறது..
எந்தத் துரோகமும் அறியாத
அப்பாவிகளின் இரத்தத்தைக்
குடித்துப் பலியெடுத்த இந்தப் பூமி...

தம்பியும் தொலைந்தான்...
அண்ணனையும் இழந்தோம்.
எம் நெஞ்சை அறுக்கும்
இந்தக் கொடிய நினைவுகளையும்,
எக்காலத்திலும் ஜீரணிக்க முடியாத
இந்தப் பெரும் துன்பங்களையும்
கொடுத்த இப்பூமி...
மாற்றங்களை சாதாரணமாக
உள்வாங்கிக்கொண்டு..
வலிகளை மறந்து.....
பழைய துன்பங்களையும்
தொலைத்தவர்கள் நினைவுகளையும்
மறந்து....துரோக பூமியாக மாறிவிட்டதோ?

இந்த பூமியில் வாழ்ந்த
எத்தனை உயிர்கள்...இல்லை என்பதை
அதை இழந்தவரைத்தவிர யாரும்
நினைப்பதாக இல்லை....
இந்த மக்களுக்காகவா என் தம்பி
ஆயுதம் ஏந்தினான்?
அவன் அண்ணன் என்பதால்
இவன் எங்கோ புதைக்கப்பட்டான்?
நெஞ்சு பொறுக்கவில்லையே!

ஆனந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உணர்ப்திணம்

## பாகம் 4

○ இராகவன்

மகுடம் வந்து கொண்டிருக்கேக்குள்ளை நான் 'லூலூவின் கோட்பாடுகள்(1)' என்ற தலைப்பில மைக்கல் கொலின் அண்ணைக்கு ஒரு கதை அனுப்பினன். அவர் அதை வாசிச்சுப்போட்டுக் கோல் எடுத்து கதைக்கேக்குள்ளை, 'ஏன் 1 எண்டு போட்டிருக்கிறியள்? 2 உம் இருக்கா?' எண்டு சீரியஸாகக் கேட்டார். 'ஓம்' எண்டன். 'ஓகே எழுதி அனுப்புங்கோ! அதையும் போடுவோம்' எண்டு சொன்னார்.

மைக்கல் கொலின் அண்ணையில ஒரு குணமிருக்கு. ஆர் எது சொன்னாலும் சீரியஸாகக் கேப்பார். தனக்கெது சரியெண்டு படுகுதோ அதைத்தான் செய்வார். மற்றது எந்த லெவலுக்கும் கீழிறங்கி வருவார். ஆனால் சொறி வேலை பாத்தால் அவரின்ரை அணுகுமுறை வேற லெவல்லயிருக்கும். ஆனால் வலு நாகரிகமாயும் நீற்றாயுமிருக்கும். உதாரணத்துக்கு ரெண்டு விஷயம் சொல்லுறன். முதல்ல 'லூலூவின் கோட்பாடுகள்(2)' இற்கு வருவம்.

அதை எழுத வெளிக்கிடேக்குள்ள எனக்கு ஒபீஸில மேலதிகாரியோடை ஒரு மிஸ் அண்டஸ்ரான்ரிங்' வந்திட்டுது. முழுப்பிழையும் அவரிலைதான். ஆனால் எனக்கு எதிராகப் பாரதூரமாக நடவடிக்கை எடுத்துப் போட்டார். அவருக்கும் மைக்கல் கொலின் அண்ணையோடை தொடர்பிருந்திருக்குது. அது எனக்குப் பிறகுதான் தெரியும். 'லூலூவின் கோட்பாடுகள்(1)' வந்தாப்போல நான் 'லூலூவின் கோட்பாடுகள்(2)' எழுதி மைக்கல் கொலின் அண்ணைக்கு அனுப்பினன். அதிலை எனக்கும் என்ர மேலதிகாரிக்கும் இடையில நடந்த பிரச்சினையைப் பற்றியும் எழுதியிருந்தனான்.

கதை கிடைச்ச கையோட அதை வாசிச்சுப்போட்டு மைக்கல் கொலின் அண்ணை கோல் எடுத்து 'எல்லாம் ஓகே! ஆனால் அந்த ஒப்பீஸ் பிரச்சினையைச் சென்ஸார் பண்ணினால் என்ன?' எண்டு கேட்டார். 'பிரச்சினையில்லை, சென்ஸார் பண்ணுங்கோ!' எண்டு நான் சொன்னன். 'ஓகே. நன்றி' எண்டுட்டு வைச்சிட்டார். பிறகு மகுடம் இதழ் வரேக்குள்ளை பார்த்தால் கதையில் சென்ஸார் ஒண்டும் செய்யாமல் நான் எழுதியனுப்பினபடியே வந்திருந்தது. எனக்கொண்டும் விளங்கேல்ல. மைக்கல் கொலின் அண்ணைக்குக் கோல் எடுத்தன். நான் என்ர டவுட்டக் கிளிய பண்ணுறதுக்கு முன்னமே அவர் விசயத்தைச் சொன்னார்.


18

'நான் உங்களோட கதையைச் சென்ஸார் செய்யிறதைப் பற்றிக் கதைச்சு முடிவெடுத்த கையோட உங்கடை பொஸ் எனக்குக் கோல் எடுத்து நீங்கள் ஏதும் தன்னைப் பற்றித் தேவையில்லாமல் எழுதி அதை மகுடத்தில் போட்டால் தேவையில்லாத பிரச்சினை வரும் எண்டு 'வோண்' பண்ணுற மாதிரிக் கதைச்சார். அவர் உங்களுக்குத்தான் பொஸ். எனக்கொரு தேட் பெர்ஸன். அவர் ஆர் என்னை 'வோண்' பண்ணுறதுக்கு? அதுதான் நான் கதையைச் சென்ஸார் பண்ணாமல் அப்பிடியே மகுடத்தில போட்டனான்' எண்டு சிரிச்சார்.

இந்தக் கட்ஸ் ஆருக்கும் லேசில வராது. அடுத்த சங்கதியும் ஒரு கதையைப் பற்றியதுதான். மகுடத்தில ஒராள் பெயருக்குப் பதிலா நம்பரை போட்டு ஒரு கதை எழுதியிருந்தார். அது ஒரு சின்னஞ்சிறு குறியீட்டுக்கதை. அந்தக் கதையை வாசிச்ச ஒராள் அதை நான்தான் எழுதியிருக்கிறன் எண்டு நினைச்சு மைக்கல் கொலின் அண்ணைக்குக் கோல் எடுத்திருக்கிறார்.

(தொடரும்)

வட்டு அப்பாத்தியும்



# பேஸ்புக் பேத்தியும்

**பேத்தி :** குட் மோர்னிங் தாத்தா. பாக்கத் தெரியிது. இலங்கை ,தமிழ்நாடு, மத்திய கிழக்குப்போர் எண்டு கனக்க விசயங்கள் பேஸ்புக்கில முட்டிப்போய்க் கிடக்கு.

கொழும்பு டொரிங்டன் பகுதியில் 400 மில்லியன் ரூபா பெறுமதியான மாளிகைக்குச் சொந்தக்காரி மேரி லௌட்ஸ் இலஞ்ச ஆணைக்குழுவால் அதிரடி அம்பலம் எண்ட ஒரு செய்தியும் இருக்கு.

**தாத்தா :** மேரி லௌட்ஸ் ஆர் தெரியுமே? எங்கடை சிரந்தி அக்காதான். நீ சொல்லுற செய்தி உண்மை உண்மெல் ராஜபக்ஸக்களுக்கு கெதியா மாமி வீடுதானோ தெரியேலை.

**பேத்தி :** அடுத்து துரோகிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைக்க வாழ்த்துகள் விஜய் அண்ணா எனச் சொல்லி காங்கிரஸ் பற்றி முன்னம் தான் சொன்ன விடயங்கள் அடங்கிய வீடியோவைப் போட்டிருக்கிறார் விஜய பிரபாகரன்.

**தாத்தா :** உதுதான் அடிப்படை தெரியாதவனை அரசியல் செய்ய விடப்பிடாது எண்டு சொல்லுறது. இப்ப பார் ஆட்சி அமைச்சால் தங்கம் தொன் கணக்கிலை வேணும். வீட்டை பெண்டுகள் சும்மா இருக்காயினம். பஸ் காசு சும்மாதானே எண்டு சுத்த வெளிக்கிட்டிடுவினம். இல்லாட்டி கறண்டுக்குக் காசு இல்லைத்தானே எண்டு நாள் முழுக்க இருந்து ரீவி பாப்பினம். எதை அறிவிக்கக் கூடாது எண்டு சொல்லித் தெரியாமல் அறிவிச்சுப் போட்டு ஆப்பிழுத்த குரங்கு மாதிரி விஜய். நல்ல காலம் சினிமாப்படம் பாக்கக் காசு தேவை இல்லை எண்டு அறிவிக்காமல் விட்டிட்டார். இருந்து பாரன் தமிழ்நாடு குட்டிக் குட்டிச் சுவராகாமல் போகாட்டி.

**பேத்தி :** தாத்தா. எப்ப பாத்தாலும் நீங்கள் இளமாக்கள் செய்யிற எல்லாத்தையும் கரிச்சுக் கொட்டினபடி. கொஞ்சமெண்டாலும் இளம் ஆக்களுக்கு ஒரு வாய்ப்பைக் குடுத்து வளரவிட்டால் என்ன?

**தாத்தா :** ஓம் குடுத்தால் நல்லாத்தான் இருக்கும். தமிழ் நாட்டுக்குக் காமராஜரை விடக் கெட்டிக்காரன் ஒருதனாலை இனி வரமுடியுமே? மனுசன் பள்ளிக் கூடம் போகாமல் ஆடு மாடு மேச்ச பெடிபெட்டையளைப் பாத்துச் சொன்னார் பசிக்குச் சாப்பாடு தாறன் போய் படியுங்கோ எண்டு. அண்டைக்குத் துவங்கினது புரட்சி. இது அதைவிட்டிட்டு எல்லாத்தையும் சும்மா தாறன். மொக்கு வத்திப்போய் படுங்கோ எண்டமாதிரி எல்லோ கிடக்கு.

**பேத்தி :** நீங்கள் என்னத்தைச் சொன்னாலும் அடுத்த கிழமை தெரியும். ஆர் தமிழ் நாட்டின்ரை தலைவன் எண்டு.

**தாத்தா :** தலைவன் ஆர் எண்டதைவிடத் தமிழ்நாட்டின்ரை தலைவிதி என்ன எண்டு தெரியும். நாசமாக்கப் போறாங்கள். சனங்கள்தான் பாவம்.

**பேத்தி :** இலஞ்ச ஆணைக்குழுவாலை நடத்தப்படுகிற புலனாய்வில் சிக்கியுள்ள முன்னாள் ஸ்ரீலங்கன் நிறுவனத்தின்ரை பிரதான நிறைவேற்று அதிகாரி மர்மமுறையில் மரணம்.

**தாத்தா :** அதென்ன திடீரெண்டு மர்ம மரணங்கள்? இப்ப இவர் மரணம். போன கிழமை மத்திய வங்கி அதிகாரி மரணம். இவைக்குத் தாங்கள் அரசாங்கத்திட்டைக் களவெடுக்கேக்கை தெரியாதோ பிடிபட்டால் என்ன நடக்கும் எண்டு.

இதிலை இன்னுமொரு சுவாரஸ்யம். இப்ப செத்த ஸ்ரீலங்கள் நிறுவன அதிகாரியை அண்டைக்குப் பிணை எடுக்க வந்த இரண்டுபேரையும் அரஸ்ட் பண்ணிட்டினம் எல்லோ. அவையை இப்ப பிணை எடுக்க இப்ப ஒருதரும் இல்லையாம். இவையள் இருண்டது விடிஞ்சது தெயாமல் அவரைப் பிணை எடுக்கக் கைக்காசு வேண்டிக் கொண்டு வந்தவையாம். பாத்தியளே நிலைமையை?

**பேத்தி :** எல்லாம் துன்பந்தான். தாத்தா காணாமல் ஆக்கப்பட்டவை பற்றின ஒரு செய்தியை ஆளுநர் சொல்லி இருக்கிறார்.

**தாத்தா :** வாசி கேட்பம். நல்ல செய்தி எண்டால் பொன்னம்மாக்காக்குச் சொல்லலாம். அவதான் பிள்ளையைப் பறிகுடுத்திட்டுத் தண்ணி வெந்நி இல்லாமல் படுத்துக் கிடக்கிறா.

**பேத்தி :** எமது வட மாகாணத்தைப் பொறுத்தவரை, 'காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம்' என்பது வெறும் அரச திணைக்களங்களின் காகிதங்களில் உறங்கும் ஒரு சாதாரண கோப்புச் சார்ந்த விடயமல்ல. இது ஆயிரக்கணக்கான குடும்பங்களின் ஆறாத கண்ணீரோடும், பல தசாப்த காலக் காத்திருப்போடும், விவரிக்க முடியாத வலியோடும் பின்னிப்பிணைந்த ஓர் அதிஉணர்வுபூர்வமான மனிதாபிமானப் பிரச்சினையாகும். அந்த உணர்வோடு அதை அணுகவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் சொல்லியிருக்கிறார்,

**தாத்தா :** ஆளுநர் சொல்லிப்போட்டார். அதை அரசாங்கமெல்லோ உணர்ச்சி பூர்வமா அணுகிறதோ? இல்லையோ எண்டு முடிவு செய்யிறது. அதை அநுர செய்வாரோ? காவிகள் விடுமோ? ராஜபக்ஸாக் கொம்பனியள் தான் விடுவினமோ?

**பேத்தி :** எமது இளைய தளபதி சாணக்கியமானவர். அவர்தான் கிழக்கின்ரை வெளிச்சம். அவர்தான் முதலமைச்சராக வர வேணும் எண்டு நிசாம் காரியப்பர் சபையில் புகழாரம்.

**தாத்தா :** அங்கை ஒரு இளைய தளபதி சில்லெடுக்கிறார். அது காணாதெண்டு இன்னும் ஒரு இளைய தளபதியைக் கொண்டு இஞ்சை சில்லெடுக்கப் போறார் இவர். அதுக்கு மற்ற முஸ்லிம்கள் ஓமாமே?

**பேத்தி :** அது சரி தாத்தா. பிக்குமாற்றை கடத்தல் விவகாரம். சங்கிலித் தொடர்மாதிரி அதுக்குப் பின்னாலை கனபேர் இருக்கினமாம்.

**தாத்தா :** இது ஒரு நல்ல காலம். அநுர உதைச் சரியா விசாரிச்சு உண்மையை வெளியிலை கொண்டு வந்து சிங்களச் சனத்துக்கு உண்மை பொய்யைத் தெரிவிக்க வேணும். திண்டு குடிச்சிட்டுச் சு ம்மா இருக்காமல் இவங்கள்தான் இனவாதத்தைக் கக்கிறவங்கள்.


**பேத்தி :** இனித் தாங்காது. நேரம் போச்சுது. இனி நிண்டால் அம்மாட்டைப் பூசைதான் வாங்க வேண்டி வரும். அதாலை போட்டு வாறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் கைவண்ணம்





தி. அபிராமி
தரம் - 8 F
யா/சாவகச்சேரி
இந்துக் கல்லூரி



பி.விதுஷா
கருணை இல்லம்.



ச.இயலிசன்
தரம் - 2
யா/சாவகச்சேரி
இந்து ஆரம்பப் பாடசாலை.



ல.பவிஷனா
தரம் -4E
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்




வி.டிஷானுஜா
தரம் -9A
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## வழிகாட்டுவோம்



# குட்டி யானையும், கர்வமும்



ஒரு அடர்ந்த காட்டில் குட்டி யானை இருந்தது. அதற்குத் தான் பெரியவன் என்ற எண்ணம் அதிகம். ஒரு நாள் காட்டில் விளையாடிக் கொண்டிருந்தபோது, ஒரு சிறிய எறும்புக் கூட்டம் வரிசையாகச் செல்வதைப் பார்த்தது.

"ஏய் எறும்புகளே! வழி விடுங்கள். நான் இந்தக் காட்டின் இளவரசன் வருகிறேன்!" என்று கர்வத்துடன் பிளிறியது.

முதிய எறும்பு ஒன்று மெதுவாகச் சொன்னது, "தம்பி, நாங்கள் எங்கள் உணவைச் சேகரித்துச் செல்கிறோம். நீ கொஞ்சம் தள்ளிப் போகலாமே?"

இதைக் கேட்ட யானைக்கு கோபம் வந்தது. "சின்னஞ்சிறு எறும்புகள் எனக்கு அறிவுரை சொல்கிறீர்களா?" என்று கூறி, தன் தும்பிக்கையில் நீரை உறிஞ்சி எறும்புகள் மீது அடித்தது. பாவம், எறும்புகள் நனைந்து தடுமாறின. சிரித்துக்கொண்டே அங்கிருந்து நகர்ந்தது. சிறிது தூரம் சென்ற யானை, ஒரு பெரிய மரத்தடியில் ஓய்வெடுக்க நினைத்தது. அப்போது ஒரு தேனீ யானையின் காதுக்கு அருகே 'சுர்ர்ர்' என்று சத்தம் போட்டது.

"உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தால் என் காது அருகே சத்தம் போடுவாய்?" என்று யானை தேனீயைத் துரத்தியது. தேனீ அசரவில்லை. அது நேராகச் சென்று யானையின் தும்பிக்கைக்குள் புகுந்து கொண்டது.

தேனீ உள்ளே கடிக்கத் தொடங்கியதும், யானை வலி தாங்கமுடியாமல் துடித்தது.

"ஐயோ வலிக்குதே! என்னை மன்னித்துவிடு தேனீயே, வெளியே வந்துவிடு!" என்று அழுதது. தேனீ வெளியே வந்து சொன்னது "கஜு, நீ பெரிய உருவம் என்பதால் மற்றவர்களைத் துன்புறுத்தக் கூடாது. உனக்குத் தேனீயால் வலிப்பது போலத்தானே, நீ நீர் ஊற்றியபோது அந்த எறும்புகளுக்கும் வலித்திருக்கும்?" என்றது.

யானை தன் தவறை உணர்ந்தது. அன்று முதல் காட்டில் உள்ள சிறிய உயிரினங்கள் முதல் பெரிய விலங்குகள் வரை அனைவரிடமும் அன்பாகப் பழகத் தொடங்கியது.

**நீதி: வலிமை என்பது மற்றவர்களை அடக்குவதில் இல்லை; மற்றவர்களிடம் காட்டும் அன்பில்தான் உள்ளது.**

## மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



க.ஆருத்ரா
தரம் 3B
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media